
பண்டித

# ஜவாஹர்லால் நேரு



12400

வர்தா பதிப்புக்கழகம், சென்னை

## பண்டித
# ஜவாஹர்லால் நெஹ்ரு

புலவர் மா. இராசமாணிக்கனார், B.O.L., L.T., M.O.L.,
விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

**வர்தா பதிப்புக் கழகம்**
**திருவல்லிக்கேணி :: சென்னை**

As. 14

First Edition, Dec. 1947
Reprinted May, 1948

*All rights reserved*

Printed at KABEER PRINTING WORKS, Triplicane, Madras.

# முகவுரை

பண்டித ஜவாஹர்லால் நேஹ்ரு உரிமைபெற்ற இந்திய நாட்டு அரசாங்க முதல் அமைச்சராக இன்று இருக்கின்றார். அவர் புகழ்பெற்ற வழக்கறிஞரான பண்டித மோதிலால் நெஹ்ருவின் தவப்புதல்வர்; செல்வத்திற் பிறந்து வளர்ந்தவர்; இங்கிலாந்திற் கல்வி கற்றுப் பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். அவர் 35 ஆண்டுகளாக இந்திய உரிமைக்குத் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்த பெரியார்; தம் வழக்கறிஞர் தொழிலையும் தந்தையார் ஈட்டிய செல்வத்தையும் உரிமைப் போரில் உதறித் தள்ளின உத்தமர்; தம் குடும்பத்தினர் அனைவரையும் உரிமைப் போரில் ஈடுபடுத்திய உரிமை இயக்கவீரர்; உள்ளம் - உரை - உடல் இம்மூன்றிலும் மிக்க தூய்மை உடையவர்; 'இந்தியா உரிமைபெற்று, இந்திய மக்கள் இன்ப வாழ்வில் திளைக்கவேண்டும்' என்பதையே மந்திரமாகக் கொண்டவர்; உரிமைப் போராட்டத்தில் ஒன்பது முறை சிறை சென்று அல்லல் உழன்றவர்; சிறைவாழ்வினாலும் உரிமைப் போராட்ட உழைப்பாலும் இல்லற இன்பத்தைப் பல ஆண்டுகள் தொடர்ந்திருந்து துய்க்காதவர். அவருடைய பேச்சிலும் எழுத்திலும் மிடுக்கும் அழகும் செறிந்திருக்கும்.

இந்திய மக்கள் உள்ளமாகிய கோவிலில் காந்தியடிகட்கு அடுத்த இடத்தைப் பெற்றிருப்பவர் ஜவாஹர் என்றே கூறலாம். இங்ஙனம் மக்களது அகக் கோவிலில் இடம்பெற்ற தியாக வீரரது வரலாறு உரிமைபெற்ற இந்திய நாட்டு இளைஞர்க்கு ஏற்றதே அன்றோ? அவ்வரலாறு அவ்விளைஞர்க்கு நாட்டுப் பற்று-தியாக உணர்ச்சி-நாட்டு முன்னேற்றத்துக்குரிய துறைகளில் உழைக்க ஊக்கம் முதலியவற்றை நல்கும்; அவர்கள் வாழ்வினை ஒளிரச் செய்யும்.

விவேகானந்தர் கல்லூரி,
சென்னை.

மா. இராசமாணிக்கம்

# உள்ளுறை


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பண்டிதர் பிறப்பு | .... | 1 |
| 2. | பண்டிதர் வளர்ப்பு | .... | 13 |
| 3. | வீட்டில் கல்வி கற்றல் | .... | 29 |
| 4. | இங்கிலாந்தில் கல்வி கற்றல் | .... | 38 |
| 5. | திருமணம் | .... | 49 |
| 6. | நாட்டுத் திருப்பணி—I | .... | 56 |
| 7. | நாட்டுத் திருப்பணி—II | .... | 74 |
| 8. | இந்தியா உரிமை பெற்றது | .... | 91 |
| 9. | உரிமை விழாவிற்குப் பிறகு | .... | 96 |
| 10. | கடிதங்கள் | .... | 103 |



ஜவாஹர்லால் நேஹ்ரு

## பண்டித

# ஜவாஹர்லால் நெஹ்ரு

## 1. பண்டிதர் பிறப்பு

### கண்ணைக் கவரும் காஷ்மீர்

'இந்தியாவின் மணிமுடி' என்று சிறப்பிக்கப் பெறும் காஷ்மீரம் இயற்கை அழகுக்கு இருப்பிடம் என்னலாம். வானளாவிய மலை முகடுகள் பனி உறையப் பெற்று வெள்ளி மலைகளாகக் காட்சி அளிக்கும். பசுமை உமிழும் மலைகளின் செறிவு பார்க்கப் பார்க்க இன்பத்தை அளிக்கும். முகிற் குழாங்கள் மூண்டெழுந்து படிப்படியாக அசைந்தும் ஆடியும் ஓடியும் சில மலை முகடுகளிற் சூழ்ந்து தவழ்ந்து பாகைபோலப் பொலியும் காட்சி விழிகட்கு விருந்தளிக்கும். மலைச் சரிவுகளில் பலவகைப் பழ மரங்களும் அம்மரங்களுடன் நீக்கமின்றி வாழ்க் கைத் துணையெனச் சுற்றிச் சுற்றிப் பின்னிக் கிடக் கும் செடிகொடிகளின் ஈட்டமும் வானுலகேறப் பச்சைப் படாம் விரித்த படிகளெனத் திகழும். புகைவண்டி அப்பசுமை நிலத்திற் புகையைக் கக்கிக் கொண்டு பறந்தோடுதல் — விடம் கக்கிக்கொண்டு பச்சை மரகத மலையைக் கிழித்தோடும் அம்பெனத்

தோன்றும். காஷ்மீரில் பசுமைக் காட்சி அற்ற இடத்தைக் காணல் அருமை. கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமையூட்டும் இயற்கை அழகு செறிந்து என்றும் மாறா இன்பம் நல்கலாற்றான் அறிஞர் அந்நாட்டினைக் 'கண்ணைக் கவரும் காஷ்மீர்' என்று பாராட்டலாயினர்.

## சாரதா பீடம்

காஷ்மீரம் பல நூற்றாண்டுகளாக இந்து அரசர் ஆட்சியில் இருந்தது. அவ்வரசர்கள் வடமொழியாகிய சம்ஸ்கிருதத்தைத் தம்முயிர்போலப் பேணி வளர்த்தனர். அரசர் வடமொழிக்கு ஆக்கம் தந்தமையால் மக்கள் ஊக்கம் கொண்டு அதனிற் புலமை பெறலாயினர். இந்தியாவின் பல பகுதியில் இருந்த சிறந்த வடமொழிப் புலவர்கள் காஷ்மீரக் காவலரைக்கண்டு தம் புலமையைக் காட்டிச் சிறப்புப் பெற்றனர்; அவருட் சிலர் காஷ்மீரத்தின் இயற்கை அழகில் ஈடுபட்டு அங்கேயே தங்கி வாழலாயினர். நாடு தன்னாட்சி பெற்றது - அரசர் குடிகளைச் சேர்ந்தவர் - நாடு வளம் மிகுந்தது. எனவே, அரசர் பிற செய்திகளிற் கருத்தைச் செலுத்தாது கலையுலகிற் கருத்தைச் செலுத்தினர்; வடமொழிப் புலவர்களுடன் இன்பப் பொழுது போக்கினர். நாட்டு இயற்கை வளமும் அரசர் உள்ள வளமும் புலவரைப் பெருக்கின; புலவர் புரவலர் அளித்த

சோற்றுச் செருக்கினல் கவிபாடலாயினர்; காவியங்கள் யாத்தனர்; நாடகங்கள் இயற்றினர்; வேறு பல நூல்களையும் பாடினர். இச்சிறப்பினல் 'காஷ்மீரம் சாரதா பீடம்' (கலைமகள் கொலுவீற்றிருக்கும் இடம்) என்று இந்திய அறிஞர் போற்றலாயினர்.

## தாழ்நிலை

'முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடி சாம்பராய் வெந்து மண்ணுவர்' அல்லவா? அது போலச் 'சாரதா பீடம்' இருந்த காஷ்மீரம் முஸ்லிம்கள் கைப்பட்டது. அவர்களுடைய மொழியும் நாகரிகமும் பரவத் தொடங்கவே, நாளடைவில் அந்நாட்டுக்குரிய வடமொழியும் இந்து சமயச் சிறப்பும் அந்நாட்டைவிட்டு அகலலாயின. ஆயினும் அந்நாட்டைவிட்டு வர மனமற்ற இந்துக்களும் சீக்கியர்களும் அங்குத் தங்கி வாழலாயினர்.

## பண்டித இராஜ்கால்

இங்ஙனம் முஸ்லிம்களுக்கிடையே வாழ்ந்து வந்த இந்துக்களுள் வடமொழிப் பண்டிதர்களும் இருந்தனர். அவர்கள் வாழையடி வாழையாக வடமொழிப் புலமை நிறைந்தவர்கள்; 'பண்டிதர்' என்ற பட்டம் பெற்றவர்கள். அவர்களுள் ஒருவர், ஏறத்தாழ இருநூறு ஆண்டுகட்குமுன் காஷ்மீரத்தில் வாழ்ந்த பண்டித இராஜ்கால் என்பவர். அவர்

வடமொழி, பாரசீகம் இரண்டிலும் புலமை பெற்றவர்; சிறந்த ஒழுக்கம் உடையவர். அவர்மீது காஷ்மீர மக்கள் மிகுந்த அன்பும் மரியாதையும் காட்டி வந்தனர்.

## ‘நெஹ்ரு’ பட்டம்

டெல்ஹியில் இருந்த முஸ்லிம் பேரரசர் ஒரு முறை காஷ்மீரத்துக்குச் சென்றார். அவர் வட மொழி, பாரசீகம் இவற்றில்பற்றுடையவர். ஆதலின் அப்பேரரசர் இராஜ்கால் பண்டிதரை அழைத்து அளவளாவினர்; அவரது பெரும் புலமையிலும் பிற நல்லியல்புகளிலும் ஈடுபட்டார்; தாம் இருந்த டெல்ஹி மாநகரில் வந்திருக்குமாறு அழைத்தார். பேரரசர் பண்டிதருக்கு ஒரு ஜாகீரையும் மாளிகை யையும் அளித்தார். பண்டிதர் பேரரசர் அழைப் புக்கு இணங்கி டெல்ஹியிற் குடியேறினர். பேரரசர் அவருக்கு அளித்த மாளிகை ஒரு ‘நஹார்’ (கால்வாய்) கரையில் இருந்தது. அந் ‘நஹார்க்கு உரியவர்’ என்ற பொருள்படும்படி இராஜ்கால் பண்டிதர் ‘இராஜ்கால் நேஹ்ரு’ என்று டெல்ஹி மக்களால் அழைக்கப் பட்டார். இங்ஙனம் அவர் பெற்ற ‘நெஹ்ரு’ என்ற பெயர் அவர் மரபினர்க்கும் வழங்கி வரலாயிற்று.

## ஆக்ராவில் குடியேற்றம்

இராஜ்கால் நெஹ்ரு - அவர் மக்கள் - அவர் பெயரர் ஆக இவர்களே டெல்ஹியில் வாழ்ந்த

வர்கள். பெயரர் காலத்தில் ஜாகீர் அழிந்து விட்டது. மொகலாய அரசும் முடிந்துவிட்டது; வெள்ளையர் ஆட்சி யாண்டும் தலை தூக்கியது. டெல்ஹியில் இருந்து வாழப் பெயரர் விரும்பிலர். அதனால் அவர் ஆக்ராவிற் குடியேறினார். அவருக்குப் பன்ஸிதார் நெஹ்ரு, நந்தலால் நெஹ்ரு என்ற புத்திரர் இருவர் இருந்தனர். அவர்கட்குப் பின் பல ஆண்டுகள் கழித்து மூன்றும் புத்திரராகப் பிறந்தவரே நமது ஜவாஹர்க்குத் தந்தையாரான **பண்டித மோதிலால் நெஹ்ரு ஆவர்.***

## இலாஹபாத்†தில் குடியேற்றம்

மோதிலால் வயிற்றில் இருந்த பொழுதே அவர் தந்தையார் காலமானார். அதனால் மோதிலால் தமையன்மாரிடமே வளர்ந்துவரலானார். பெரிய தமையனார் நீதி இலாகாவில் வேலை பார்த்து வந்தார்; இளையவரான நந்தலால் என்பவர் இலாஹபாத்தில் வழக்கறிஞராக வேலைபார்த்தார். அதனால் நெஹ்ரு - குடும்பம் இலாஹபாத்திற் குடியேறி நிலைத்தது. மோதிலால் நந்தலாலிடமே இருந்து வளர்ந்துவரலானார்.

## மோதிலால் படிப்பு

தந்தையார் இறந்தபிறகு பிறந்தவர் ஆதலால், மோதிலால், தாயாராலும் உடன் பிறந்தவராலும்

* பிறப்பு—6-5-1861 † 'கடவுள் நகர்' என்பது பொருள்.

செல்வமாக வளர்க்கப்பட்டார். அவர் இயல்பாகவே துடுக்குத்தனம் மிக்கவர்; அவரைக் கண்டிக்க லாகாது என்று எல்லோரும் கட்டுப்பாடாக இருந்த மையால் அவரது துடுக்குத்தனம் மிகுதியாயிற்று. அவர் கூர்ந்த அறிவு வாய்ந்தவர்; கல்வியில் ஆர்வம் கொண்டவர்; எனினும் ஒழுங்காக இருந்து படிப்ப தில்லை. அவர் மேல் நாட்டு முறையிலே உடை உடுப்பார்; எவர்க்கும் அஞ்சுவதில்லை; பள்ளியில் பிள்ளைகளைத் தூண்டிக் குறும்புகள் செய்விப்பார்; தாம் மட்டும் தப்பித்துக்கொள்வார். அவர் தம் பாடங்களைச் செவ்வையாகக் கருத்தூன்றிப் படிப்ப தில்லை. ஆயினும், எந்த வகுப்பிலும் ஓராண்டுக்கு மேல் படித்ததில்லை.

அவர் கல்லூரி மாணவரான பிறகேனும் படிப்பிற் கருத்தைச் செலுத்துவார் என்று வீட்டார் எண்ணினர். அவர் கல்லூரிப் படிப்பிலும் கவனம் செலுத்தவில்லை; அழகாக உடை உடுத்தல், ஊரைச் சுற்றுதல், பள்ளியில் மாணவரைத் தூண்டிக் குறும்புகள் செய்வித்தல், பல கலைத் தொடர்பான நூல்களை மிகுதியாகப் படித்தல் இவற்றிற் பெரும் பொழுதைச் செலவிட்டார். இவற்றால் அவருடைய பொது அறிவு வளர்ச்சி அடைந்தது; ஆனால் கல்லூரிப் படிப்பு வீணாயிற்று. அதனால் அவர் பி. ஏ. தேர்வில் தேர வழியற்றவரானார்; முதல் நாள் தேர்வுக்குச் சென்றார்; தம் மனதிற்குப் பட்ட விடைகளை வரைந்தார்; தாம் தேறுவது

கடினம் என்று எண்ணி அடுத்த தேர்வுகட்குச் செல்லவில்லை. அவர் முதலில் வரைந்த விடைத்தாள் தேர்வு பெறத்தக்க அளவில் மதிப்பெண்ணைப் பெற்றிருந்தது. ஆயினும் அதனை அவர் அறியார். 'பாடங்களைப் படியாமல் தேர்வு எழுதுவது வீண் வேலை' என்று எண்ணியே அவர் அடுத்த தேர்வு கட்குச் செல்லவில்லை; அதனால் பி. ஏ. பட்டம் பெறத் தவறினர்.

பின்னர் மோதிலால் சட்டக் கல்லூரியிற் சேர்ந்தார். அங்கு முன்பு இருந்தநிலைக்கு நேர்மாறாக நடந்துகொண்டார். அவர் மிகுந்த கவலை கொண்டு சட்ட நூல்களைப் படித்தார்; ஆசிரியருடன் பழகி ஐயங்களைப் போக்கிக்கொண்டார்; கல்லூரிக் கழகத்தில் சிறந்த பங்கெடுத்துக்கொண்டு சட்டங் களைப் பற்றிய நுணுக்கங்களைப் பற்றி விவாதித்தார்; இறுதியில் சட்டத் தேர்வில் சிறப்புறத் தேறித் தங்கப் பதக்கம் பரிசு பெற்றார். அவரது மாறுதலைக் கண்டு வீட்டார் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர்.

## வழக்கறிஞர் தொழில்

சட்டத்தேர்வில் தேர்ச்சிபெற்ற மோதிலால் நெஹ்ரு மூன்றாண்டுகள் கான்பூரில் இருந்து வழக் கறிஞர் தொழிலிற் பயிற்சி பெற்றார். அவர் கல்லூரி மாணவராக இருந்த பொழுது கணக்கற்ற ஆங்கில நூல்களைப் படித்தவர்; பலகலைத் தொடர்பான நூல் கள் பல படித்தவர்; ஆதலின் ஆங்கிலத்தில் தங்கு

தடையின்றிப் பேசும் வன்மை பெற்றிருந்தார்; சட்டத் தேர்வில் சிறப்புறத் தேர்ச்சி பெற்றவர் ஆதலின் சட்ட நுணுக்கங்களை நன்கு அறிந்தவராக விளங்கினர். சட்ட அறிவும் ஆங்கிலப் பேச்சு வன்மையும் ஒருங்கே பெற்றிருப்பவரே சிறந்த வழக்கறிஞராகப் பெயர் பெறமுடியும். இவை இரண்டும் ஒருங்கே அமையப் பெற்ற மோதிலால் தமது தொழிலிற் பயிற்சி பெறும்பொழுதே 'வழக்கினை எடுத்து விளக்கி வாதித்தலில் வல்லவர்' என்று பெயர் பெற்ருர்.

மோதிலால் இளமை முதலே குஸ்தி, குத்துச் சண்டை முதலிய விளையாட்டுகளைக் காண்பதில் பெரு விருப்பம் கொண்டவர். இந்த விளையாட்டுகள் கான்பூரில் மிகுதியாக நடைபெறுதல் வழக்கம். மோதிலால் அவற்றைப் பார்க்கத் தவறுவதில்லை. 'எல்லோரும் இந்த விளையாட்டுகளில் பயிற்சி பெற வேண்டும்; இவை உடலுக்கும் நன்மை விளைக்கும்; தற்காப்புக்கும் முதற்படி' என்பது மோதிலால் கருத்தாகும்.

தொழிற் பயிற்சி பெற்ற மோதிலால் மூன்ருண்டுகட்குப் பின்னர் இலாஹபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டார். அவர் தம் தமையனரான நந்தலாலுடன் இருந்து வேலை செய்தார். நந்தலால் விரைவிற் காலமாகவே, பெரிய குடும்பத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு மோதிலாலைச் சேர்ந்தது. தமையனர்

பார்த்து வந்த வழக்குகளை மோதிலால் கவனிக்கலானார்; வேலையில் ஆர்வம், குடும்பப் பொறுப்பு ஆகிய இரண்டும் அவரை இராப்பகலாக உழைக்கச் செய்தன. அவர் 'தொழிலில் வல்லுநர்' என்று பெயர் பெற்றார். சிற்றரசர், பிரபுக்கள் முதலியோர் வழக்குகள் அவரிடமே வந்தன. அவர் சில ஆண்டுகட்குள் பெருஞ் செல்வரானார்.

## வேலையில் கருத்து

மோதிலால் மனம் வழக்கறிஞர் தொழிலிலே பதிந்திருந்தது. அவர் அக்கால அரசியற் கூட்டங்களிற் கலந்தறியார். அக்கால அரசியல் வாதிகள் மீது அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது. "இந்த அரசியல் வாதிகள் பேசுவதில் வல்லவர்கள். இவர்கள் பயன்தரத்தக்க முறையில் ஒரு செயலும் செய்யவில்லையே!" என்று தம் நண்பர்களிடம் கூறி எள்ளி நகையாடுவார்.

## நண்பரும் விருந்தும்

இலாஹாபாத்தில் இருந்த வெள்ளையர் பலர் அவருக்கு நண்பராக இருந்தனர். அவர்களிடம் அவருக்கு மிகுந்த மதிப்பு இருந்தது. அவர்களுடைய நாகரிகப் பேச்சு, பழகும் முறை, உழைப்பு முதலிய நல்லியல்புகள் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. மோதிலால் அவர்களைப் போலவே நடை, உடைகளை மேற்கொண்டவர் ஆதலின் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் அவரிடம்


நெருங்கிப் பழகலாயினர். இங்ஙனம் பழகிய வெள்ளை உத்தியோகஸ்தர்கட்கும் இந்திய அறிஞர்க்கும் மோதிலால் மாளிகையில் அடிக்கடி விருந்து நடக்கும். அவர் தாம் ஈட்டிய பொருளைத் தாராளமாகச் செலவிட்டு வந்தார்.

## ஜவாஹர் பிறப்பு

மோதிலாலுக்கு மனைவியாராக வாய்த்தவர் சொரூப ராணி என்ற பெயர் கொண்டவர். அந்த அம்மையார் பெயருக்கு ஏற்ற பேரழகு படைத்தவர்; 'இல்லாள்' என்னும் சொல்லுக்குரிய இலக்கணம் நிரம்பியவர்; கணவரது சொல் கடவாதவர்; கணவர் கருத்துப்படி, செல்விருந்து ஓம்பி வருவிருந்து நோக்கி வாழ்க்கை நடத்தியவர். சிறந்த அழகும் பரந்த நோக்கமும் உயர்குணப்பண்பும் ஒருங்கே பெற்ற அந்த அம்மையாருடன் மோதிலால் இல்லறமாகிய நல்லறத்தை இனிது நடத்தி வந்தார். 'இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை' ஆதலால் மோதிலால் வீட்டைப்பற்றிய கவலை சிறிதும் இன்றித் தமது தொழிலில் முழுக் கவனத்தையும் செலுத்தினர். குணச்சிறப்பும் பணச்சிறப்பும் பெற்ற அவர்கள் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக இலங்கியது. அந்த இன்ப வாழ்க்கையின் பயனாகத் தோன்றியவரே † நமது ஜவாஹர்லால்.

---

†பிறப்பு - 14—11—1889



மோதிலால்
நெஹ்ரு



சொரூப
ராணியார்

# 2. பண்டிதர் வளர்ப்பு

## செல்வக் குழந்தை

பண்டித மோதிலால் பெருஞ் செல்வர் அல்லவா? அவருக்கு ஒரு மைந்தர் பிறந்தார் எனின், அம்மைந்தரைப் பெற்றோர் எங்ஙனம் வளர்த்திருப்பர்? மைந்தரோ, முதல் மைந்தர். ஆதலின், பெற்றோர் அவரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர். அன்னையார் சொரூபராணி தம் தவமைந்தரைக் கண்ணை இமைகள் காப்பது போலக் காத்து வளர்த்தனர். மோதிலால் நீதிமன்றத்திற்குப் போகும்பொழுது குழந்தையைப் பார்த்துவிட்டுப் போவார்; வீடு திரும்பியதும் நேரே குழந்தையைப் பார்த்த பிறகு தான் தமது அறைக்குச் செல்வார்; உணவு நேரத்திற்குப் பிறகு சிறிது நேரம் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சுவார். குழந்தை பெற்றோர் அகத்தையும் முகத்தையும் மலர்வித்து இன்பமாக வளர்ந்து வந்தது.

## பெரிய தாயார்

ஜவாஹருக்குப் பெரிய தாயார் பீபி அம்மாள் என்பவர். அவர் இளம்பருவத்தில் கைம்மைக் கோலம் பூண்டவர். வைதிகக் குடும்பத்தினர் ஆதலின் அவர் மறு மணம் செய்துகொள்ளவில்லை.

அவ்வம்மையார் தம் தங்கையார் இல்லத்திலே இருந்து காலம் கழிக்கலானர். அக்கையும் தங்கை-சொரூபராணியும் உயிரொன்றும் உடல்இரண்டுமாக வாழ்ந்தனர். வீட்டுக் காரியங்கள் எல்லாவற்றையும் பீபி அம்மையாரே கவனித்து வந்தார். வேலைக் காரர்களிடத்தில் வேலை வாங்குதல், வீட்டுக்குரிய பொருள்களை வரவழைத்தல் முதலிய வேலைகள் அவரைச் சார்ந்தவை. அந்த அம்மையார் குழந்தை - ஜவாஹர் வளர்ப்பிலும் பங்கு கொண்டார். தங்கையார் பிற வேலைகளைக் கவனிக்கச் செல்லும் பொழுதெல்லாம் பீபி அம்மாள் குழந்தை அருகில் இருப்பார்.

## ஆங்கிலத் தாதிமார்

தம் தவமைந்தர் நன்முறையில் வளர்க்கப்படல் வேண்டும் என்பது தந்தையார் கருத்து. அதனல் அவர் மைந்தரை வளர்க்க ஆங்கிலத் தாதிமாரை அமர்த்தினர். அப்பெண்மணிகள் மிகுந்த சுகாதார முறையில் மைந்தரை வளர்த்து வந்தனர்; நாடோறும் தூய ஆடைகள் - தூய படுக்கை - தூய தொட்டில் - சத்துள்ள பால் - இவற்றை ஜவாஹர் அறையில் காணலாம். மாலை நேரங்களில் சிறிய கைவண்டியில் ஜவாஹர் புன்னகையுடன் படுத் திருப்பார்; தாதிமார் வண்டியை ஓட்டிச் செல்வர். ஆங்கிலத் தாதிமார் பழக்கத்தால் ஜவாஹர் - நம் வீட்டில் குழந்தைகள் தமிழிற் பேசுவது போல

ஆங்கிலத்தில் பேசலானர்; அவர் ஆங்கிலக் குழந்தையாகவே வளர்க்கப்பட்டார்.

## தலை நீட்டலும் தண்டனையும்

மூன்று வயதுக்குப் பிறகு ஜவாஹர் தந்தையார் செல்வநிலை, அவரைக் காணவந்த நண்பர்கள் பேச்சு, தம் வீட்டுக்கு வந்த பள்ளி மாணவர் பேச்சு இவற்றைக் கூர்ந்து கவனிக்கலானர். தந்தையார் அறையில் பலர் கூடிப் பேசுவர். மோதிலால் வீடு அதிரும்படி நகைப்பவர். அவரது நகைப்போசை கேட்டதும் ஜவாஹர் ஏதோ வேடிக்கை நடப்பதாக எண்ணித் தந்தையார் அறைக்கு ஓடுவார். அந்தச் சிறு வயதில் அவருக்குத் தந்தையாரிடம் அச்சம் மிகுந்து காணப்பட்டது. அதனல் அவர் மெதுவாகத் தந்தையார் அறைக்குள் தலையை நீட்டுவார். உடனே தந்தையார் அவருக்கு ஒரு தண்டனை கொடுப்பார். அத்தண்டனை யாது? மோதிலால் தம் மைந்தரைத் தூக்கித் தம் மடிமீது இருத்திக்கொள்வர். ஜவாஹர் அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு இருப்பார்; தந்தையார் முகத்தையும் நண்பர் முகங்களையும் பார்த்துக் கொண்டிருப்பார்.

## ‘அப்பா இரத்தம் குடிக்கிருர்’

ஜவாஹர் தகப்பனர் அறைக்குள் அடிக்கடி தலை நீட்டுவது வழக்கம். ஒரு நாள் மோதிலால் தம்

ஆங்கில நண்பர்களுடன் உயர்ந்த மதுவைக் குடித்துக்கொண்டு இருந்தார். அது சிவப்பு நிற முடைய மதுவாகும். அதனை அறியாத ஜவாஹர் அதனை இரத்தம் என்று கருதினர்; அவர் உடல் ஆட்டம் கொண்டது. அவர் குடுகுடு என்று தாயார் அறைக்குள் ஓடினர்; "அம்மா, அம்மா, அப்பா இரத்தம் குடிக்கிருர்!" என்று பதட்டத் துடன் பகர்ந்தார். தாயார் புன்னகை கொண்டு தம் செல்வ மைந்தரை மார்புறத் தழுவி, "தம்பி, அப்பா பருகுவது இரத்தம் அன்று. அஃது ஒரு வகைக் குடிநீர். நீ கவலைப்படாதே" என்ருர்.

## அச்சமும் அன்பும்

ஜவாஹர் இளமை முதலே தந்தையாரிடம் மிக்க மதிப்பு வைத்திருந்தார்; அறிவு, ஆண்மை, வீரம் என்பவை நிறைந்த தனி மனிதராகத் தம் தந்தையாரை எண்ணினர். "நான் உற்ற வயதில் தந்தையாரைப் போல ஆதல் வேண்டும்" என்று அச்சிறு வயதிலேயே அவர் எண்ணினர்; தந்தை யாரிடம் மிக்க அன்பு கொண்டார்; ஆனல் அதே நேரத்தில் அவர்பால் அச்சமும் கொண்டார். மோதிலால் சினம் கொள்ளின் வீடு அதிரும்; ஒரு வரும் அவர் எதிரில் நிற்க மாட்டார். அவர் அங்ஙனம் சினம் கொள்ளக் காரணம் என்ன? வேலையாட்கள் சில நேரங்களில் செய்யும்தவறுகளே காரணமாகும். அப்பொழுது அவருடைய விழிகள் சிவக்கும். அவர்

உரத்த குரலில் அதட்டிப் பேசுவார். அக் காட்சியைக் காணும் ஜவாஹர் கருடனைக் கண்ட பாம்பு போல நடுநடுங்குவார்; ஆயின், அடுத்த நிமிடம் தந்தையார் தம் தாயாரிடமோ, நண்பரிடமோ நகைச் சுவை பொருந்தப் பேசும் பொழுது ஜவாஹர் முகம் மலர்ச்சி அடையும். "அப்பாவின் சீற்றம் எங்கோ மறைந்து விட்டதே!" என்று தமக்குள் எண்ணி வியப்படைவார்.

## நம் நாட்டுக் கதைகள்

ஜவாஹருக்குப் பீபி அம்மாளிடம் அன்பு மிகுதியும் உண்டு. அவர் அவ் வம்மையாரிடமே பெரும் பொழுதைக் கழித்தார்; அவரிடமே இராமாயணம் - பாரதம் ஆகிய இதிகாச வரலாறுகளைக் கேட்டார். கண்ணன், அருச்சுனன், இராமன், பரதன் என்ற இதிகாச வீரர் வரலாறுகள் அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவர் அவ்வரலாறுகளிலிருந்து - பெற்றோர்க்குப் பிள்ளைகள் அடங்குதல் வேண்டும், உடன் பிறப்பாளர் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும், உண்மை பேசுதல், அஞ்சாமை, வீரவுணர்ச்சி ஆகிய நற்பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பவற்றைத் தம் உள்ளத்தில் நன்கு பதித்துக் கொண்டார்.

## பவுன்டன் பேஞ*

ஜவாஹர் ஆறு வயதினராக இருந்தபொழுது ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அவர் ஒரு நாள் தம் தந்தையார் வீட்டில் இல்லாத பொழுது அவரது அறைக்குள் நுழைந்தார்; மேசைமீது இரண்டு பவுன்டன் பேஞக்கள் இருப்பதைக் கண்டார். உடனே அவர் தமக்குள், "அப்பா ஒருவர்தாமே! அவருக்கு ஒரு பேஞ இருப்பதே முறை. மேலும் அவர் ஒன்றைக் கொண்டுதானே எழுதுகிருர். மற்ரென்று அவரிடம் இருந்தும் பயனில்லை. ஆதலின் நான் அதனை எடுத்துக்கொள்வேன்" என்று எண்ணமிட்டார்; ஒரு பேஞவை எடுத்துக் கொண்டு மறைந்தார்.

வெளியிற் சென்றிருந்த மோதிலால் வீட்டுக்கு வந்தார்; தம் அறைக்குள் நுழைந்தார்; மேசை மீது ஒரு பேஞ இருக்கக் கண்டார்; "மற்ரென்று எங்கே?" என்று சினந்தார்; ஜவாஹரை அழைத்தார்; "நீ என் பேஞவை எடுத்தனையா?" என்று கேட்டார். தந்தையார் முகத்திற் கோபக்கனலைக் கண்ட சிறுவர் மயிலினைக் கண்ட மாநாகம் போல ஒடுங்கினுர்; உண்மை கூறின் என்ன தண்டனை கிடைக்குமோ என்று அஞ்சினுர்; அதனுல், "நான் அதனைத் தொட வில்லை" என்று அழுத்தமாகக் கூறினுர்.

---

* Fountain pen

மோதிலால் ஜவாஹர் அறையைச் சோதித்தார்; பேனா அகப்பட்டது. அவருக்குச் சீற்றம் மிகுதியாயிற்று. தமது பேனாவை எடுத்து ஒளித்து வைத்தது ஒரு குற்றம்; தாம் எடுக்கவில்லை என்று பொய் பேசினது மற்றொரு குற்றம். இவ்விரண்டினையும் எண்ண எண்ண அவர் கடுங்கோபம் கொண்டார். கோபம் கொடிதன்றோ? அதன்வயப் பட்ட மோதிலால் தம்மை மறந்தார்; குற்றம் செய்தவர் தம் தவ மைந்தர் என்பதனையும் மறந்தார்; அத் தவமைந்தர் ஆறு வயதினர் என்பதையும் எண்ணிலர்; சிறுவரை நையப் புடைத்தனர்.

சிறுவர் அடிபொறுக்க முடியாமல் அலறிக் கொண்டேதாயாரிடம் ஓடினார். அன்புக்கு உறைவிடமானவர் தாய்மார் அல்லவா? அவர்கள் மனம் இரக்கமே உருக்கொண்டது அல்லவா? சொரூப ராணியார் தம் தவ மைந்தரை அணைத்துக் கண்ணீர் துடைத்து ஆறுதல் கூறினார்; "தம்பி, நீ செய்தது தவறு. அப்பாவிடம் உண்மையை உரைத் திருத்தல் வேண்டும். இனி ஒரு பொழுதும் பொய் பேசாதே. உள்ளதை உள்ளவாறு உரைத்தலே உயர்ந்தோர் செயல்" என்று அன்புடன் கூறினார்.

ஜவாஹர் அந்த நிகழ்ச்சியை மறக்கவில்லை. அவர் அன்றுமுதல் தந்தையார் பொருள்களைத் தொட்டதில்லை; பொய் பேசியதும் இல்லை. தாம் செய்தது தவறு என்பதை அவர் நன்கு உணர்ந்

தார். அந்நிகழ்ச்சி அவரைத் தூய்மை யாக்கியது என்னலாம்.

## வழக்கறிஞர் குமாஸ்தா

தந்தையாரிடம் குமாஸ்தாவாக இருந்த முன்ஷி முபாரக் ஆலி என்ற முஸ்லிம் அறிஞரிடம் ஜவாஹர் நெருங்கிப் பழகினர். அந்தக் குமாஸ்தா சிறந்த ஒழுக்கம் உடையவர்; அரபி, பாரசீகம், உருது மொழிகளில் பயிற்சி மிக்கவர். அவர் சிறுவரான ஜவாஹரிடம் மிக்க அன்பு காட்டினர்; அவருக்கு அரபி நாட்டுக் கதைகள், பாரசீக நாட்டுக் கதைகள், இந்திய நாட்டுக் கதைகள் இவற்றை நாள்தோறும் கூறி வந்தார். பல சுவை நிறைந்த அக்கதைகள் சிறுவர் உள்ளத்தைக் கவர்ந்தன. குமாஸ்தா இந்திய வரலாற்று நிகழ்ச்சிகளையும் ஒன்றன்பின் ஒன்ருகக் கூறத் தொடங்கிச் சிப்பாய்க் கலக நிகழ்ச்சி முடியக் கூறி முடித்தார்.

ஜவாஹர் அக் குமாஸ்தா கூறிய கதைகளை அடிக்கடி எண்ணிப் பார்ப்பதுண்டு. ஒவ்வொரு கதையிலும் உயிர் நாடியாகவுள்ள பொருளை உள்ளத்தில் அமைத்தல் அவர் வழக்கமாக இருந்தது. அவர் தாம் உணர்ந்த படிப்பினைகளை அக் குமாஸ்தாவிடம் தெரிவிப்பார். குமாஸ்தா சிறுவரது அறிவு நுட்பத்தை வியந்து பாராட்டு வார். ஜவாஹர் அந்தக் குமாஸ்தாவைத் தம் அந்தரங்க நண்பராகக் கொண்டு தம் எண்ணங்களை

அச்சிறு வயதில் அவரிடம் கூறிக்கொள்வார்; பல ஆண்டுகள் கழித்துத் தாம் வரைந்த தமது வரலாற்றில் அக்குமாஸ்தாவைப் பற்றிக் குறித்துள்ளது அவரது நினைவாற்றலையும் அவர் குமாஸ்தாவிடம் கொண்டிருந்த அன்பையும் நன்கு உணர்த்துகிறது அன்றோ?

## சமயத் தொடர்பானவை

இந்து இல்லங்களில் சமயத் தொடர்பான விரதங்கள், கொண்டாட்டங்கள் முதலியன நடைபெறுதல் வழக்கம் அல்லவா? மோதிலால் இல்லத்தில் இத்தகைய சமயத் தொடர்பானவை பல நடைபெறும். மோதிலால் மேனாட்டு நாகரிகத்தில் விஞ்சியவர் ஆதலின், சமய விரதங்கள், நோன்புகள் வருங் காலங்களில் அவற்றைப்பற்றி வீட்டுப் பெண் மணிகளிடம் வேடிக்கையாகப் பேசுவார்; அவர்கள் விருப்பப்படி விட்டுவிடுவார். அவரது வேடிக்கைப் பேச்சுகளைக் கேட்டுவந்த ஜவாஹரும் தாயாரையும் பெரிய தாயாரையும் வேடிக்கை செய்வார். ஆனால் வீட்டில் சிறப்பு முறையில் பூசைகள் நடைபெறுவதை மகிழ்ச்சியோடு கவனிப்பார்; தாயாருடன் கங்கையில் நீராடச் செல்வார்; பெரிய தாயாருடன் காசி முதலிய தலங்கட்குச் சென்று மீள்வார். எனினும் அவருக்கு இளமைமுதல் இன்றுவரை சமயத்தில் ஆழ்ந்த பற்றுதல் உண்டாகவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

### பிறந்தநாள் விழா

ஜவாஹர் பிறந்தநாள் விழா ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டது. சிறுவர் அதனை சிறப்பாக வரவேற்றார். அவர் அன்று கங்கைநீரில் நீராடிப் புதிய உடைகளை உடுப்பார். அன்று ஏழை மக்கட்குக் கோதுமையும் உணவுப் பொருள்களும் வழங்கப்படும். உற்றார் உறவினரிடமிருந்தும் மோதிலாலுடைய நண்பர்களிடமிருந்தும் சிறுவர்க்குப் பரிசுகள் வந்து சேரும். அன்று மாலை மோதிலால் உறவினர்க்கும் நண்பர்க்கும் பெரிய விருந்து நடத்துவார். சிறுவராகிய ஜவாஹர் ஆடை அணிகளுடன் திகழ்வார்; "என் பிறப்பு நாளை எண்ணி இச் சிறப்புகள் நடைபெறுகின்றன. இந்த நாள் ஆண்டுக்கு ஒரு முறை தானே வருகின்றது; அடிக்கடி வரின், எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்று தமக்குள் எண்ணிக் களிப்பார். சிறுவர் உணர்ச்சி இதுவாகத்தானே இருத்தல் கூடும்?

### குதிரைச் சவாரி

ஜவாஹருக்குக் குதிரைச் சவாரியில் விருப்பம் மிகுதியாக இருந்தது. அக்காலத்தில் இலாஹபாத்தில் குதிரைப்படை ஒன்று அரசாங்கத்தினரால் வைக்கப்பட்டிருந்தது. அப்படையைச் சேர்ந்த குதிரை வீரன் ஒருவன் ஜவாஹருக்கு நண்பனானன். அவன் சவாரி செய்த குதிரை

சிறந்த அரபிக் குதிரை. அவ்வீரன் நாள்தோறும் ஜவாஹர் வீட்டுக்கு வருவான்; அவரைக் குதிரை மீது இருத்தி ஊர்வலம் செய்விப்பான்; சில நாட்களில் அவன் உதவி இன்றியே சிறுவர் தாமே குதிரைச் சவாரி செய்வார்.


ஒருநாள் மாலை ஜவாஹரை [illegible] சென்ற அக் குதிரை அவர் இல்லாமல் த[illegible]க்கு வந்தது. மோதிலால் அப்பொழுது தம் ந[illegible] தேநீர் விருந்து அளித்துக்கொண்டிரு[illegible] தவ மைந்தரைக் காணாத மோதிலால் திடு[illegible] குதிரை வந்த திசை நோக்கி ஓடலானா[illegible] தினரும் அவரைப் பின்பற்றினர்; வே[illegible] சைக்கிள் வண்டிகளில் ஏறி நாற்றிசை[illegible] ஜவாஹரைத் தேடலாயினர். மோதிலால் [illegible] பக்கத்தில் ஜவாஹர் சிறிய வீரரைப் [illegible] மகிழ்ச்சியோடு நடந்துவந்தார். அவர் தம் தந்[illegible]ரைக் கண்டதும் புன்னகை பூத்து "குதி[illegible] என்னைக் கீழே தள்ளிவிட்டு ஓடிவிட்டது" என்[illegible] அமைதியாகக் கூறினார். மோதிலாலும் அவரது நண்பரும் சிறுவரது அஞ்சாமையைப் பாராட்டித் தட்டிக் கொடுத்து வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

## ஆனந்த பவனம்

ஜவாஹர் பத்து வயதினராக இருந்தபொழுது மோதிலால் புதிய மாளிகை ஒன்றைக் கட்டிக் குடி

புகுந்தார். அதன் பெயரே 'ஆனந்த பவனம்' என்பது. பெரிய சுற்று மதிலுக்குள் அழகிய மாடமாளிகை அமைந்திருந்தது. மாளிகையைச் சூழ மணமிகு மலர்ச் செடிகள் வைக்கப்பட்டன; பழமரங்கள் வைத்துப் பயிராக்கப்பட்டன. ஒரு பக்கம் டென்னிஸ் விளையாட இடம் அமைக்கப்பட்டது. பிறிதொரு பக்கம் செய்குளம் ஒன்று உண்டாக்கப் பட்டது. அதன் அடியில் மணல் நிறையப் பரப்பப் பட்டது. நாற்புறமும் ஒழுங்கான படிக்கட்டுகள் அமைக்கப்பட்டன. சுருங்கக் கூறின் ஆனந்த பவனம் ஆனந்த வாழ்க்கைக்கு உரியதாகவே இருந்தது. மாளிகையையும் செய்குளத்தையும் மின்சார விளக்குகள் அழகு செய்தன.

மாலை நேரங்களில் மோதிலாலும் நண்பர்களும் செய்குளத்தின் கரையில் கூடுவது வழக்கம். அவர்களிற் சிலர் கரையோரத்தில் போடப்பட்ட இருக்கைகளில் இருந்து அளவளாவுவர். வேறுசிலர் குளத்தில் இறங்கி நீந்தி விளையாடுவர். ஸர் டெஜ் பஹதூர் சாப்ரு இலாஹபாத்தில் இருந்த வழக் கறிஞருள் ஒருவர். அவரும் மோதிலாலுக்கு நெருங்கிய நண்பராவர். அவரும் செய்குளத்திற்கு வருவார்; முதற்படியிலேயே உட்கார்ந்து நீராடுவர்; எவரேனும் கீழே இறங்குமாறு கை நீட்டினுல் அல்லது தள்ள முயன்ருல் அலறுவார். இங்ஙனம் நீந்தத் தெரியாத பெருமக்கள் சிலர் முதற்படியில் இருந்தே நீராடுவர். ஆயின், சிறுவராகிய ஜவாஹர்



ஆனந்த பவனம்

வேலையாட்களின் உதவியால் நன்ருய் நீந்தக் கற்றுக்கொண்டார். அவர் அச்சமின்றி அக் குளத்தில் நீந்துவதைக் கண்டு சாப்ரு முதலியோர் வியப்புற்று அவரைப் பாராட்டுவர்.

## முற்போக்குடைய மோதிலால்

சிற்றரசர் ஒருவர் வழக்கை முன்னிட்டுப் பண்டித மோதிலால் இங்கிலாந்து சென்றிருந்தார்; தம் வேலை முடிந்த பிறகு ஐரோப்பிய நாடுகட்குச் சென்று இந்தியா மீண்டார். அவர் காஷ்மீரப் பிராமண வகுப்பினர் ஆதலின், கடல் கடந்து சென்று மீண்டதும் பிராயச்சித்தம் செய்து கொள்வார் என்று அவர் மரபினர் எதிர்பார்த்தனர். மோதிலாலுக்கு அந்த எண்ணமே இல்லை. அவர் பிராயச்சித்தம் செய்துகொள்ள மறுத்து விட்டார். அதனல் அவர் மரபினர் அவரை வெறுத்துப் பேசினர். அஞ்சா நெஞ்சம் படைத்த மோதிலால் அவர்களைப் பொருட்படுத்தவில்லை. உறவினருள் ஒரு பகுதியார் மோதிலாலை ஆதரித்தனர். இதனல் அம்மரபில் இரு கட்சிகள் உண்டாயின. மோதிலாலுக்குமுன்னர் ஐரோப்பாச் சென்று மீண்டு பிராயச்சித்தம் செய்துகொள்ளாதவர் சிலர் இருந்தனர். அவர்களும் ஆங்கிலக் கல்வி கற்ற பலரும் மோதிலால் கட்சியைச் சேர்ந்தனர். ஆயினும் விரைவில் அனைவரும் ஒன்று சேர்ந்து வாழலாயினர்.

## தங்கையின் தோற்றம்

ஜவாஹர் பதினொரு வயதுடைய சிறுவராக இருக்கையில் அவர் தந்தையார் முன் சொன்னவாறு இங்கிலாந்து சென்றார். அவர் மேனாட்டில் இருந்த பொழுது சொரூப ராணியார் ஒரு பெண் குழந்தையைப் பெற்றார். "தம்பி, உனக்கொரு தங்கை பிறந்தாள்" என்று மருத்துவர் கூறின பொழுது ஜவாஹர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. "நான் இந்தப் பெரிய மாளிகையில் தனியே விளையாடிக் கொண்டு துன்பப்படுகிறேன். எனக்குத் துணைவர் இல்லையே என்று நான் கவலைப்பட்ட நாட்கள் பல. ஆதலால் என்னுடன் விளையாடத் தங்கை பிறந்தாள் என்பதைக் கேட்க மகிழ்ச்சி அடைகிறேன்" என்று மலர்ந்த முகத்துடன் பதிலளித்தார்.

பிறந்த பெண்குழந்தை சிறந்த முறையில் வளர்க்கப்பட்டது. மோதிலால் மேனாட்டிலிருந்து வந்த பிறகு பெயரீடு விழா ஒன்று நடைபெற்றது. உற்றார் உறவினர் நண்பர் முதலியோர் விழாவிற் கலந்துகொண்டனர். குழந்தைக்கு விஜயலக்ஷ்மி என்னும் பெயர் இடப்பட்டது.

ஜவாஹர் தம் படிப்புநேரம், விளையாட்டுநேரம் ஆகிய இரண்டும் போக எஞ்சிய நேரத்தைக் குழந்தை அருகில் இருந்தே கழித்தார். பேரழகுடன் பிறந்த பெண் குழந்தை தமையனரது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அப் பெண்குழந்தையே

நாற்பத்தெட்டு ஆண்டுகட்குப் பிறகு உரிமைபெற்ற இந்தியாவின் தூதராக இன்று ருஷ்யாவில் இருக்கின்ற விஜயலக்ஷ்மி அம்மையார் என்பதை அறிய நீங்கள் வியப்படைவீர்கள் அல்லவா? ஜவாஹர் இன்று உலகிற் பெயர் பெற்றிருத்தல் போலவே அம்மையாரும் உலகப் புகழ் பெற்றவர்; சிறந்த அரசியல் அறிவு நிரம்பப் பெற்றவர். பேரறிவும் பேராற்றலும் படைத்த மோதிலாலுக்குப் பிறந்த பிள்ளைகள் இன்று இந்தியத் தாயின் இரண்டு கண்களாகக் காட்சிஅளிக்கின்றனர். புலிக்குப் பிறந்தவை பூனைகள் ஆகா அல்லவா?

## 3. வீட்டில் கல்வி கற்றல்

### ஆங்கில ஆசிரியர்

ஜவாஹர் தொடக்கப் பள்ளியிற் படிக்கவில்லை. அவர் இளம் பருவத்தில் ஆங்கிலத் தாதிமாரிடம் ஆங்கிலம் பேசக் கற்றுக்கொண்டார் அல்லவா? ஐந்து வயதான பின்னர் அவர் இந்திய ஆசிரியர் ஒருவரிடம் ஆங்கிலம் - இந்தி - கணிதம் முதலிய பாடங்களைப் பயின்றார்; பத்து வயதிற்குள் தொடக்க நிலைப் பள்ளிக்குரிய எல்லாப் பாடங்களையும் படித்து முடித்து, நடுநிலைப் பள்ளிக்குரிய பாடங்களைக் கற்கத் தொடங்கினர். அவரது கூரிய அறிவினைக் கண்ட தந்தையார் பெர்டினண்ட் டி புரூக்ஸ் என்ற

வெள்ளையர் ஒருவரை ஆசிரியராக அமர்த்தினர். அந்த ஆசிரியர் ஆனந்த பவனத்திற்கு வந்து பாடம் கற்பிப்பது வழக்கம். அவர் கைதேர்ந்த ஆசிரியர்; ஐரோப்பிய நாடுகளை நன்கு சுற்றியவர்; பொது அறிவு நிரம்பப் பெற்றவர்; பிள்ளைகளைப் படிக்கச் செய்வதில் சமர்த்தவர்; புன்னகை தவழும் முகத்தினர்; மிகத் தெளிவான முறையில் அரிய செய்திகளை விளக்கும் ஆற்றல் பெற்றவர்.

## ஆங்கிலத்தில் ஆர்வம்

அவர் ஓர் ஆங்கில நூலைத் தொடங்குவதற்கு முன் அதனைப் படிக்க வேண்டும் என்னும் ஆவலைப் பல உதாரணங்களால் ஊட்டிவிடுவார். மாணவர் அவர் குறித்த நூலை ஆவலோடு வாசித்து முடிப்பார். ஆசிரியர் அந்நூல் சம்பந்தமான கேள்விகள் கேட்டு மாணவரை விடை கூறச்செய்வார்; பின்னரே அடுத்த நூலை வாசிக்கச் செய்வார். இவ்வாறு அந்த ஆசிரியர் நூல்களைப் படிக்கும் ஆவலை ஜவாஹர் உள்ளத்தில் அழுந்த ஊட்டிவிட்டார். அதனல் ஜவாஹர் ஸ்காட், டிக்கென்ஸ், தாக்கரே, வெல்ஸ் முதலிய புகழ்பெற்ற ஆசிரியர்கள் வரைந்த நாவல்களையும் கதைகளையும் ஊக்கங்காட்டிப் படித்தார்; பல செய்யுள் நூல்களையும் படித்துப் பொருள் கண்டார்; பேச்சாளர் சிலருடைய பேச்சுகளை ஆர்வத்துடன் படித்தார்; இங்கிலாந்தின் வரலாற்று நூலை ஊக்கமாகக் கற்ருர்; ஆசிரியருடன் இந்திய

வரலாற்றுக்கும் இங்கிலாந்தின் வரலாற்றுக்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றிப் பேசினார். அவரது ஆங்கில மொழி அறிவு நாளுக்குநாள் வளர்பிறை போல வளர்ந்து வந்தது.

## வீட்டிலே விஞ்ஞானப் பயிற்சி

ஆங்கில ஆசிரியர் ஜவாஹருக்கு விஞ்ஞான அறிவையும் ஊட்டலானார். விஞ்ஞானப் பயிற்சிக்குரிய பொருள்கள் வேண்டும் அல்லவா? மோதிலால் ஓர் அறையைக் காலிசெய்து கொடுத்தார்; விஞ்ஞானப் பயிற்சிக்குத் தேவையான பொருள்களை வாங்கிக்கொடுத்தார். ஆசிரியர் அவற்றை அந்த அறையில் ஒழுங்காக அடுக்கி, அவ்வறையை அழகான விஞ்ஞான ஆராய்ச்சிக்கூட மாக்கினார். சிறுவரான ஜவாஹர் அந்த அறையைக் கண்டு மகிழ்ந்தார்; "நான் விஞ்ஞான அறிஞனாகப் போகிறேன்" என்று எண்ணி மகிழ்ந்தார்; அவ்வறைக்குட் புகுந்து, ஆசிரியர் விளக்கப்படி ஒவ்வொரு பயிற்சியாகச் செய்யலானார்.

பிள்ளைகள் தாமாகவே ஒன்றைச் செய்யப்பெரு விருப்பம் கொள்வது இயற்கை. அவர்களுக்கு அத்தகைய வசதி அளிக்க வேண்டும் என்பது போதனை முறைக் குறிக்கோள். அப்பயிற்சிக்கு ஏற்ற இடங்களுள் விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடம் ஒன்றாகும். ஆதலின் ஆங்கில ஆசிரியர் 'இன்ன இன்னவாறு செய்யின் இன்ன முடிவு கிடைக்கும்; நீயே முயன்று

பார்' என்று ஜவாஹரிடம் கூறிவிட்டு அவரது சோதனையைக் கவனித்துக்கொண்டு இருப்பார். முழுப் பொறுப்பும் தம்மீது விழுந்தவுடன் ஜவாஹர் மிகுந்த கவலையுடனும் உணர்ச்சியுடனும் சோதனை யில் இறங்குவார்; ஆசிரியர் தந்த குறிப்புப்படி பயிற்சி செய்து வெற்றி காண்பார். இங்ஙனம் அவர் பௌதிக-ரஸாயனத் தொடர்பான பயிற்சியில் ஊக்கத்துடன் ஈடுபட்டார்; அவற்றுற்குரிய நூல்களை ஊக்கத்துடன் கற்கலானார்.

## இந்தி, வடமொழிப் பயிற்சி

மோதிலால் இந்தி - வடமொழி இரண்டிலும் பண்பட்ட புலவர் ஒருவரையும் தம் மைந்தருக்கு ஆசிரியராக அமர்த்தினர். அந்தப் புலவர் பெரும் புலமை உடையவர்; ஆயின் எளிய முறையிற் கற்பிக்க வழி அறியாதவர். அவர் வடமொழி இலக்கணத்தை மிகுதியாகக் கற்பிக்கத் தொடங் கினர். ஜவாஹர் வடமொழி நூல்களை ஓரளவு படித்துப் பொருள் உணரும் அளவுக்குப் பயிற்சி பெறுதல் போதும் என்பது மோதிலால் கருத்து. ஜவாஹரின் கருத்தும் அதுவே. ஆயின் அந்த ஆசிரியர் 'இலக்கணம் ஒழுங்காக அறிந்துகொள்ளா விடில் பயனில்லை' என்று, அதனில் மிகுந்த கருத்தைச் செலுத்தலானர். ஜவாஹருக்கு இலக் கணம் எட்டிக் காயாக இருந்தது. அதனல் அவர் வடமொழிப் படிப்பை அறவே விட்டு, இந்தியைப்

படிக்கலானர்; இந்தியில் வரையப்பட்டிருந்த பல நூல்களை ஆர்வத்துடன் கற்கலானர்.

## பிரம ஞான சங்கம்

ஜவாஹரின் ஆங்கில ஆசிரியர் பிரமஞான சங்கத்தைச் சேர்ந்தவர். அச்சங்கத்தை இந்தியாவில் வேரூன்றச் செய்தவர் டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் ஆவர். அச்சங்கத்தின் தலைமையமைப்பு சென்னை அடையாற்றங்கரையில் அமைந்துள்ளது. உலகத்து நாடுகள் எல்லாவற்றிலும் அதன் கிளைச் சங்கங்கள் இருக்கின்றன. ஜவாஹர் இருந்த இலாஹபாத்திலும் ஒரு சங்கம் இருந்தது. அது ஜவாஹரின் ஆசிரியர் இருந்த வீட்டில் இருந்தது. அச்சங்கத்தைச் சேர்ந்தவர் அடிக்கடி அங்குக் கூடி உலகத்துச் சமயங்களைப் பற்றி ஆராய்ச்சிப் பேச்சுகளைப் பேசுவர்; வாதங்கள் நடத்துவர்.

பன்னிரண்டு வயதுடைய ஜவாஹர் அக்கூட்டங்கட்குச் செல்வார்; அமைதியாக இருந்து பலர் பேசுவதைக் கேட்பார். பகவத்கீதை பற்றி ஒருவர் செய்த சொற்பொழிவு அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. "இந்த ஆங்கிலேயர்கள் நம் நாட்டுச் சமய நூலையும் நன்கு படித்து அதன் மதிப்பை அறிந்திருக்கின்றனரே!" என்று தமக்குள் எண்ணி மகிழ்ந்தார். அதுமுதல் அவர் உள்ளத்தில் இந்து சமயம் உயர்ந்த குறிக்கோள்களை உடையது என்ற எண்ணம் வேரூன்றியது. ஒவ்வொரு நாட்டுச் சமய

ஆசிரியர் வரலாறும் அவர் செய்த சமய நூலும் அங்கு ஆராய்ச்சி செய்யப்பட்டன. ஒவ்வோர் உறுப்பினரும் ஒரு சமயத்தைப் பற்றியும் அதனை உண்டாக்கியவரைப் பற்றியும் பேசுவர். ஜவாஹர் அச்சொற்பொழிவுகளைக் கூர்ந்து கேட்பார். அவர் அறிவு அக்கூட்டங்களால் வளர்ச்சி பெற்றது. அவர் மனம் சமயவுண்மையை அறிய நாடியது. தமது சொந்த சமயமாகிய இந்து சமயத்தில் அவருக்குப் பற்று ஏற்படத் தொடங்கியது; அந்த அறிஞர் சொற்பொழிவுகளிலிருந்து, "நம் பண்டை நூல்களாகிய பகவத்கீதை, உபநிஷத்துகள் என்பன போற்றத்தக்கவை" என்ற எண்ணம் மட்டும் அவருக்கு உண்டானது.

## பெசன்ட் அம்மையார் சொற்பொழிவு

பெசன்ட் அம்மையார் இங்கிலாந்தில் உழவர் - தொழிலாளிகள் இயக்கங்களில் இருந்து தொண்டு செய்தவர்; சிறந்த பேச்சாளர்; வன்மை மிகுந்த எழுத்தாளர்; அஞ்சா நெஞ்சம் படைத்தவர். அவர் பிளாவட்ஸ்கி அம்மையார் முதலியோர் தோற்று வித்த பிரமஞான சங்கத்திற் சேர்ந்தவர்; உலகச் சமயநூல்களை நன்கு படித்தவர். எல்லாச் சமயங்களிலும் உள்ள நல்ல கொள்கைகளைத் திரட்டி வெளிப் படுத்துவதே பிரமஞான சங்கத்தின் நோக்கம். அம்மையார் அம்முயற்சியில் சிறந்த பங்கெடுத்துக்கொண்டார். அம்மையார் அடிக்கடி

காசி நகரத்திலும் சுற்றுப்புற நகரங்களிலும் தம் சமயக் கொள்கைகளைப் பிரசாரம் செய்தார். அவர் இந்து சமயத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர்; இந்தியப் பெண்கள் உடையில் திகழ்ந்தார்; சைவ உணவை உட்கொண்டார்; இந்து சமயக் கொள்கைகளைப் பற்றித் திருந்திய முறையில் பேசினார். இக்காரணங்களால் அவர் பெயர் இந்தியாவில் நன்கு பரவத் தொடங்கியது.

பெசன்ட் அம்மையார் ஒருமுறை இலாஹபாத் சென்று பிரமஞான சங்கத்தைப் பற்றிப் பேசினார். அப்பொழுது கூடிய கூட்டத்திற்கு நமது இளைஞர்-பதின்மூன்று வயதுடைய ஜவாஹர் சென்றிருந்தார். அம்மையாரது ஒளி பொருந்திய முகம், வசீகரத் தோற்றம், இந்திய உடை, அழகான பேச்சு இவற்றில் ஈடுபட்டார்; தாமும் அச்சங்கத்தில் உறுப்பினராக விரும்பினார்; கூட்டம் முடிந்தவுடன் நேரே வீடு சென்று தந்தையாரிடம் தமது விருப்பத்தைத் தெரிவித்தார்.

மோதிலால் பிரமஞான சங்கத்தில் உறுப்பினராக இருந்தவர்; பின்னர் எக்காரணத்தாலோ அதனை விட்டு விலகினார். அவர் தம் மைந்தரது ஊக்கத்தைக் குறைக்கலாகாது என்று எண்ணிப் பிரமஞான சங்கத்திற் சேர அநுமதி அளித்தார். இளைஞர் மிக்க மகிழ்ச்சியோடு பிரமஞான சங்கத்திற் சேர்ந்தார்; பெசன்ட் அம்மையாரிடம் சன்மார்க்க உபதேசங்களைப் பெற்றார்.

அது முதல் ஜவாஹர் பிரமஞான சங்கக் கூட்டங்கட்குச் செல்வது வழக்கம்; பல பெரியோர்களுடைய சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தார்; காசியில் கூடிய பேரவைக்குச் சென்றிருந்தார். அங்குப் பிரமஞான சங்கத்தைத் தோற்றுவித்தவருள் ஒருவரான கர்னல் ஆல்காட்டைக் கண்டு களித்தார்; அப் பெரியாருடைய சொற்பொழிவுகளில் ஈடுபட்டார்.

## நாட்டுப் பற்று அரும்புதல்

இங்ஙனம் ஜவாஹர் ஆங்கில நூல்களைப் படித்தல் - விஞ்ஞானப் பயிற்சி செய்தல் - பெரியோர் சொற்பொழிவுகளையும் வாதங்களையும் கேட்டல் - இந்தி பயிறல் ஆகியவற்றில் தமது பதினைந்து வயது வரை ஈடுபட்டிருந்தார். அவரைப் பரந்த அறிவுடையவராகச் செய்த ஆங்கில ஆசிரியர் ஜவாஹரை விட்டுச் சென்றனர். அவர் சென்ற பின்னர்ப் பிரமஞான சங்கப்பற்று ஜவாஹரை விட்டுச் சிறிது சிறிதாகக் குறைந்தது.

ஜவாஹருடன் அவருடைய உறவினரான மாணவர் பலர் கலந்து பேசி விளையாடுவதுண்டு. அவர்கள் பேச்சுகளிலிருந்து, " இந்தியாவை ஆண்டு வருகின்ற ஆங்கிலேயர் நிறச் செருக்கு உடையவர்; ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கட்கு உயர்ந்த சம்பளமும் இந்திய உத்தியோகஸ்தர்கட்குக் குறைந்த சம்பளமும் தருகின்றனர். அவர்கட்கு

நம் நாட்டு உழவிலும் கைத்தொழில் வளர்ச்சியிலும் கவலை இல்லை. வெளிநாட்டுப் பொருளால் நம் நாட்டுச் செல்வம் இந்தியாவை விட்டுப் போகின்றது. அதனால் நாடு தினந்தோறும் வறுமை மிகுந்ததாகி வருகின்றது" என்பன போன்ற விவரங்களை அறிந்தார்; "நம் தாய்நாடு உரிமை பெற்றால்தான் நம் மக்கள் நலமுறுவர். நாடு உரிமைபெற நாம் உழைக்கவேண்டும்" என்று எண்ணினர். அவர் அந்த எண்ணத்தை நாளும் வளர்த்து வரலானர்; இந்திய வரலாற்று நூல்களை ஆழ்ந்து படிக்கலானர்; இந்தியா எப்பொழுது தன்னாட்சிபெற்று வாழ்ந்தது- இந்தியாவை எவ்வெக் காலங்களில் இந் நாட்டு மன்னர்களே ஆண்டனர்-வெளிநாட்டவர் எவ்வெப் பொழுது ஆண்டனர்-இந்த ஆட்சி முறைகளால் இந்திய மக்கள் அடைந்த இன்பதுன்பங்கள் எவை- வெள்ளையர் ஆட்சி இந்தியாவில் எவ்வாறு ஏற்பட்டது-அந்த ஆட்சியில் ஏற்பட்டுள்ள நலன்கள் யாவை-வேண்டுமென்றே கவனிக்கப்படாமல் அவர்களால் விடப்பட்டுள்ளவை யாவை-என்பனவற்றுக்கு ஏற்ற விடைகளைக் காண முனைந்தார்; ஆங்கிலத்தில் வரையப்பட்டிருந்த இந்திய வரலாற்று நூல்கள் பலவற்றை ஆழ்ந்து படித்தார்; முடிவில், "வெளியார் ஆட்சியில் இருக்கும்வரை இந்தியா முன்னேற முடியாது" என்ற முடிவுக்கு வந்தார். அந்த எண்ணம் அவர் உள்ளத்தில் வேரூன்றி வளரலாயிற்று.

### தந்தையார் விருப்பம்

தம் செல்வ மைந்தரை இங்கிலாந்தில் படிக்க விட வேண்டும் என்பது மோதிலால் விருப்பம். தாயாரான சொரூபராணியார்க்கோ ஜவாஹரை விட்டிருக்க மனம் இல்லை. “நமக்கு இருப்பவன் ஒரே மகன்; இப்பொழுதுதான் அவனுக்குப் பதினாறும் வயது தொடக்கமாகியுள்ளது. அவன் இதுவரை நம்மைவிட்டுப் பிரிந்தவன் அல்லன். அவன் புதிய நாட்டில் எவ்வாறு தனித்திருப்பான்? நாம் தாம் அவனைவிட்டு எங்ஙனம் தனித்திருத்தல் இயலும்?” என்றெல்லாம் தாயார் எண்ணி மனம் வருந்தினர்; மோதிலாலும் பீபி அம்மையாரும் ஆறுதல் கூற, ஒருவாறு தேறித் தம் தவ மைந்தரை இங்கிலாந்துக்கு அனுப்ப இசைந்தனர். பெற்றோர் முடிவை அறிந்த இளைஞர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை; “இங்கிலாந்து முதலிய அயல் நாடுகளைப் பார்ப்பது அறிவு வளர்ச்சிக்கு நல்லது” என்று எண்ணி மகிழ்ந்தார்.

## 4. இங்கிலாந்தில் கல்வி கற்றல்

### கப்பல் பிரயாணம்

மோதிலால் ஒரு குறிப்பிட்ட நன்னாளில் தம் மனைவியார், ஜவாஹர், விஜயலக்ஷ்மி இவர்களுடன் இங்கிலாந்திற்குப் புறப்பட்டார். அப்பொழுது ஜப்பானுக்கும் ருஷ்யாவுக்கும் போர் கடுமையாக

நடந்து கொண்டிருந்தது. தந்தையாரும் மைந்தரும் தமது ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த ஜப்பான் மீது பற்றுடையவர்கள்; ‘ஜப்பான் உலக வல்லரசு களோடு போட்டியிட்டுப் பெரிய வல்லரசாக மாறி வருதல் ஆசியாவுக்கு நல்லது; வெள்ளையரைத் தவிர வேறு இனத்தினர் வல்லரசு படைத்திருத்தல் இயலாது என்னும் எண்ணத்தை ஜப்பான் மாற்றி விட்டது. ஆசியாக் கண்டத்தில் அத்தகைய வல்லரசு ஒன்று இருத்தல் இந்தியா முதலிய கீழ்த் திசை நாடுகட்கு நல்லது’ என்பது மோதிலால், ஜவாஹர் இருவர்தம் கருத்தாகும். அதனால் அவர்கள் அதன் போர் நிலையைப்பற்றி அறிய நாள்தோறும் செய்தித் தாள்களை ஊன்றிப் படித்து வந்தனர். அவர்கள் தாங்கள் கப்பற் பிரயாணத்தில் ருஷியா - ஜப்பான் போரைப் பற்றியே பேசிச் சென்றனர்.

## பள்ளியிற் சேர்தல்

அவர்கள் டோவர்த் துறைமுகத்தில் இறங்கி இலண்டனுக்குப் புகைவண்டியிற் பிரயாண மாயினர்; அப்பொழுது செய்தித்தாள் ஒன்றினை வாங்கிப் படித்தனர்; ஜப்பான் கடற்படை ருஷியக் கடற்படையுடன் போரிட்டு வெற்றி பெற்றது என்ற செய்தியை அறிந்து மகிழ்ந்தனர்; அம் மகிழ்ச்சி யுடன் இலண்டன் மாநகரை அடைந்தனர்; சில நாட்கள்வரை இலண்டன் மாநகரத்தைச் சுற்றிப்

பார்வையிட்டனர். பின்னர் மோதிலால் ஜவாஹரை ஒரு பள்ளியிற் சேர்த்து, இலண்டனை விட்டுப் புறப்பட்டார். தாயார் தம் தவ மைந்தர்க்கு வேண்டும் ஆறுதல் கூறி ஆசிர்வதித்துக் கணவருடன் புறப்பட்டார். அவர்கள் பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி முதலிய நாடுகளைப் பார்வையிட்டு இந்தியா மீண்டனர்.

## ஜவாஹர் - பள்ளி மாணவர்

ஜவாஹர் இயல்பாகவே அஞ்சா நெஞ்சம் படைத்தவர் ; எனினும் பெற்றோர் பிரிவாற்றாது சில நாட்கள்வரை துன்புற்றார் ; பிறகு பள்ளி மாணவருடன் பழக்கம் மிகுந்ததனாலும் பலவகை விளையாட்டுகளில் ஈடுபட்டதனாலும் பள்ளிப் படிப்பில் கவனம் செலுத்தியதாலும் பெற்றோரது பிரிவை மறந்தார். அவர் அன்றாடம் செய்தித்தாள்களைப் படித்துவந்தார் ; இங்கிலாந்தின் அரசியலை நன்கு அறிய ஆர்வம் கொண்டு, ஓய்வு நேரங்களிற் பல நூல்களைப் படித்துவந்தார்; அக்காலத்தில் இங்கிலாந்தில் நடைபெற்று வந்த வானவூர்திச் சோதனைகளில் கருத்தைச்செலுத்தினார்; வானவூர்திகள் இலண்டன் நகருக்கு மேலே பறப்பதைக் கண்குளிரக் கண்டு மகிழ்ந்தார் ; 'இம் முயற்சி வெற்றி பெறின் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் வான்வழிச் செலவு* ஏற்படலாம். அப்பொழுது நாம் அடிக்கடி இந்தியா

*செலவு - பிரயாணம்

சென்று நம் பெற்றோரைப் பார்த்து மீளலாம்' என்று எண்ணினர்.

ஜவாஹரது பொது அறிவைப் பல வழிகளிலும் சோதித்த ஆசிரியர்கள் அவரைப் பாராட்டி அன்புடன் நடத்தினர். அவரே வகுப்பில் முதல்வராக விளங்கினர். அவருடன் இந்திய மாணவர் சிலரும் அப்பள்ளியிற் படித்து வந்தனர். அவருள் பரோடா மன்னர் மகனும் கபூர்தாலா அரசர் மூத்த மகனும் குறிப்பிடத்தக்கவர். ஜவாஹர் அவர்களுடன் நெருங்கிப் பழகினர்.

## அன்சாரியின் நட்பு

சிறந்த காங்கிரஸ் தலைவருள் ஒருவராக இருந்து மறைந்த டாக்டர் அன்சாரி இலண்டனிற் கல்விகற்று இலண்டன் வைத்தியசாலை ஒன்றில் வேலைபார்த்து வந்தார். அவர் அக்காலத்தில் உற்ற வயதினராக இருந்தார். ஜவாஹர் அவருடன் நட்புக்கொண்டார்; விடுமுறை நாட்களில் அவரைக் கண்டு பேசி வந்தார். அவர்களது நட்பு 'நவில்தொறும் நூல் நயம் போல' வளர்ந்து வந்தது.

## இந்திய அரசியல் நிலைமை

இந்தியாவில் நாட்டு உரிமைக்காகப் போராடி வந்த காங்கிரஸ் இயக்கத்தின்மீது இந்திய அரசாங்கத்தார் பல அடக்கு முறைகளைக் கையாண்டனர்; தலைவர் சிலரை நாடு கடத்தினர்; 'இந்தியப் பொருள்

களையே வாங்குக; வெளி நாட்டாருடைய பொருள்களை வாங்கற்க' என்ற கிளர்ச்சி நாடெங்கும் பரவியது. அதனல் வெகுண்ட அரசாங்கத்தினர் காங்கிரஸ் இயக்கத்தை ஒடுக்க முற்பட்டனர். இந்தச் செய்திகள் மிகச் சுருங்கிய அளவில் ஆங்கிலச் செய்தித்தாள்களில் வெளியாயின. ஜவாஹர் இந்தியச் செய்திகளை நாடோறும் கூர்ந்து கவனித்து வந்தார்; தம் தாய்நாடு என்று உரிமைபெற்று உய்யும் என்று எண்ணி எண்ணி ஏங்கினர்.

## கரிபால்டியின் வரலாறு

ஜவாஹர் விளையாட்டுகளிலும் இந்தியச் செய்திகளிலும் கருத்தைச் செலுத்திவந்த பொழுதிலும் பள்ளிப்படிப்பில் இருந்த ஊக்கத்தைத் தளர விட்டிலர். அவர் தேர்வுகளில் முதல்வராகிப் பரிசுகள் பெற்ருர். அவர் பரிசாகப் பெற்ற நூல்களுள் கரிபால்டியின் வரலாற்று நூல் ஒன்ருகும். கரிபால்டி என்பவர் இத்தாலி நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட பெருவீரர். அம்முயற்சியில் அவர் அடைந்த இன்னல்கள் மிகப்பல. அவ்வீரரை இத்தாலியர் இன்றும் கொண்டாடி வருகின்றனர். அப் பெருவீரர் வரலாறு, உரிமை வேட்கை விஞ்சி இருந்த ஜவாஹர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது வியப்பில்லை அன்றே? 'எத்தகைய இன்னல்கள் நேரினும் நாம் நமது தாய்நாட்டு விடுதலைக்குப் பாடுபட வேண்டும்' என்ற அழுத்த

மான எண்ணத்தைக் கரிபால்டியின் வீர வரலாறு ஜவாஹருக்கு உண்டாக்கிவிட்டது என்பதில் ஐயமில்லை.

## கல்லூரி வாழ்க்கை

ஜவாஹர் 1907-ல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டிரினிட்டி கல்லூரியிற் சேர்ந்தார். அங்குப் புகழ்பெற்ற பேராசிரியர் பலர் இருந்தனர்; கல்வியிற் பெருக்கம் கொண்ட மாணவர் பலர் இருந்தனர். ஜவாஹர் அக்கல்லூரி யில் இரஸாயனம், தாவர சாத்திரம், நில இயற்கைச் சாத்திரம் இவற்றைப் பாடங்களாக எடுத்துக் கொண்டார்; தம் பாடங்களில் கருத்தூன்றிப் படித்து வந்தார். அக்கல்லூரி மாணவர் ஒருவர்க்கு ஒருவர் இலக்கியம், வரலாறு, பொருளாதாரம், அரசியல் இவை பற்றிப் பேசிவந்தனர்; ஆராய்ச்சி செய்தும் வந்தனர். ஜவாஹர் அவர்கள் பேசி வந்தவற்றைக் கூர்ந்து கவனித்தார்; அவர்களைப் போலத் தாமும் அக்கலைகளில் பண்பட்ட அறிவைப் பெற விரும்பி, அவற்றுக்குரிய நூல் களைப் படித்தார்; சில மாதங்கட்குப் பிறகு மற்ற மாணவர்தம் உரையாடல்களிற் கலந்துகொண்டார்; தம் வகுப்புக்குரிய பாடங்களிலும் சிறந்து விளங்கினர்.

## இந்திய மாணவர் கழகம்

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக இந்திய மாணவர் ஒரு கழகத்தை அமைத்துப் பேசிவந்தனர். அவர்கள் அதனில் வரலாறு, விஞ்ஞானம், இந்திய அரசியல் பற்றிச் சொற்பொழிவுகள் செய்தார்கள்; தக்க பேராசிரியர்களை வரவழைத்துப் பேச வைத்தார்கள். அக்கழகத்திற் பேசாத உறுப்பினர் தண்டம் செலுத்தவேண்டும் என்பது விதி. ஜவாஹர் அக்கழகத்தில் உறுப்பினரானார்; அங்கு நடைபெற்ற பல சிறப்பட்ட சொற்பொழிவுகளையும் போட்டிப் பேச்சுகளையும் கவனித்துவந்தார்; ஆயின் தாம் மட்டும் பேசுவதில்லை; அதற்குரிய தண்டத்தை மட்டும் தவறாது செலுத்திவந்தார். அக்கழகத்தில் சேர்ந்து தீவிரமாகப் பேசி வந்தவருள் ஜே. எம். சென்குப்தா, சையத் முஹம்மது, சைபுத்தீன் கிச்லூ, அஹம்மத் ஷெர்வானி என்போர் குறிப்பிடத் தக்கவர். இவர் அனைவரும் பிற்காலத்தில் இந்திய உரிமை இயக்கத்திற் பங்கெடுத்து உழைத்த பெரியார்கள். இவர்களை விடத் தீவிரமாக இந்திய அரசியலை விவாதித்தும் நாட்டுப் பற்றைக் காட்டியும் பேசிய இந்திய மாணவர் பலராவர். ஆனால் அவர்கள் இந்தியாவிற்குத் திரும்பிக் கலெக்டர் - நீதிபதி - வழக்கறிஞர் வேலைகளில் ஈடுபட்டு அரசாங்க அடியவராயினர்.

இந்தியாவிலிருந்து இங்கிலாந்து செல்லும் இந்தியத் தலைவர்கள் இந்திய மாணவர் கழகத்தில் சொற்பொழிவாற்றுதல் வழக்கம். ஜவாஹர் இருந்தபொழுது அங்கு விபின சந்திர பால், லாலா லஜபதிராய், கோபாலகிருஷ்ண கோகலே என்பவர் போந்து இந்திய அரசியல் நிலைபற்றி அரிய சொற்பொழிவுகள் ஆற்றினர்; தாம் இங்கிலாந்துக்கு வந்த கருத்தையும் விளக்கினர். அவர்களது சிறந்த நாட்டுப் பற்றும், நாட்டு நலனுக்காக அவர்கள் எடுத்துக்கொண்ட பேருழைப்பும் ஜவாஹர் மனத்திற் பசுமரத்தாணிபோலப் பதிந்தன. அவர் கோபாலகிருஷ்ண கோகலேயின் அரசியல் நுண்ணறிவினைக் கண்டு வியந்தார்; அவரிடம் அளவற்ற மதிப்புக் கொண்டார்.

## இந்தியாவில் மோதிலால்

ஜவாஹர் கல்லூரியிற் படித்துவந்தபொழுது இந்திய அரசியலில் கொந்தளிப்பு மிகுதியாக இருந்தது. பால கங்காதர திலகர் போன்ற தலைவர்கள் சிறைப்பட்டார்கள். அரசாங்க அடக்கு முறைகள் மிகுதிப்பட்டன. பொது மக்கள் நாட்டுப்பற்றுக் கொள்ளலாயினர். இங்ஙனம் பொதுமக்களைப் பற்றிய நாட்டுப்பற்றுச் சிறந்த அறிஞராகிய மோதிலாலை மட்டும் விட்டுவிடுமா? அஃது அவரையும் இறுகப் பற்றியது. அதனால், அவர் அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டார். ‘பிரிட்டிஷ்

அரசாங்கத்துக்கு உட்பட்ட குடியேற்ற நாட்டு உரிமை இந்தியாவுக்கு வந்தாற் போதும்; முழு உரிமை இப்பொழுது தேவை இல்லை' என்பது அவர் கருத்து. அக்கருத்துக் கொண்டவர் மித வாதிகள் எனப்பட்டனர். இக் கட்சியைச் சேர்ந்தவரே கோபாலகிருஷ்ண கோகலே. 'முழு உரிமையே காங்கிரஸ் குறிக்கோள்' என்று பேசியவர் தீவிர வாதிகள் எனப்பட்டனர். திலகர் தீவிர வாதி யாவர். மோதிலால் தமது மாகாணக் காங்கிரஸ் இயக்கத்துக்குத் தலைவரானார்; மாகாணத்திற்கு உட்பட்ட பல நகரங்களில் கிளைச் சங்கங்களைத் தோற்றுவித்தார்; பேச்சாளரைக் கொண்டு பொது மக்கட்கு அரசியல் அறிவினை ஊட்டச் செய்தார்.

ஜவாஹர் கல்லூரி மாணவராக இருந்த பொழுதே தீவிர வாதியாக விளங்கினர். அவருக்குத் தம் தந்தையார் போக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் தொழில் ஒன்றிலேயே ஈடுபட்டிருந்த தம் தந்தையார் அரசியலிற் கலந்துகொண்டதே போதும் என்று ஜவாஹர் எண்ணி மகிழ்ந்தார்.

## சட்டக் கல்லூரி

ஜவாஹர் தமது இருபதாம் வயதில் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டார்; ஐ. சி. எஸ். படிக்க விரும்பினர். ஆயின் இருபத்திரண்டு வயதுக்கும் இருபத்து நான்கு வயதுக்கும் இடைப்பட்டவரையே

அந்தத் தேர்வுக்குத் தேர்ந்தெடுத்தல் அக்கால வழக்கமாக இருந்தது. அதனால் இருபது வயதினரான ஜவாஹர் 'பாரிஸ்டர்' பட்டம் பெறச் சட்டக் கல்லூரியிற் சேர்ந்தார்.

ஜவாஹர் 1910-ல் அயர்லாந்துக்குச் சென்றார்; அந்த நாடு இங்கிலாந்திற்கு அடங்கிய நாடு. அதனால் அங்கு உரிமை பெறப் போராடும் இயக்கம் ஒன்று இருந்தது. ஜவாஹர் அவ்வியக்கத்தின் சட்ட திட்டங்களை நன்றாகப் படித்தறிந்தார்; அவ்வியக்க நடைமுறைகளைக் கவனித்தார்; 'இந்த முறைகளில் நமது விடுதலை இயக்கம் அமைக்கப்பட வேண்டும்' என்று எண்ணினார்.

ஜவாஹர் இங்கிலாந்து நாட்டுச் சட்ட நூல்களை நன்கு பயின்றார்; இந்திய நாட்டுச் சட்ட நூல்கட்கும் அவற்றுக்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்தார்; சிறந்த சட்டநிபுணர்தம் அரிய சொற்பொழிவுகளைக் கேட்டார்; சட்டம் பற்றிய விவாதப் பேச்சுகளிற் கருத்தைச் செலுத்தினார்; நீதிபதிகள் வழக்கை விசாரித்துத் தீர்ப்புக் கூறும் முறையினையும் வழக்கறிஞர்கள் வாதிக்கும் முறையினையும் நீதி மன்றங்கட்குச் சென்று கவனித்தார்; இங்ஙனம் முயன்று சட்டக்கலை அறிவைப் பெற்றார்; 1912-ல் பாரிஸ்டர் தேர்விலும் சிறப்புறத் தேறிப் பட்டம் பெற்றார்.

## ஐரோப்பாப் பிரயாணம்

ஜவாஹர் ஐரோப்பிய நாடுகளைப் பார்த்துக் கொண்டு இந்தியா மீள விரும்பினர்; அதனல் முதலிற் பிரான்சுக்குச் சென்றார்; பெருவீரரான நெப்போலியன் கல்லறை, பாரிஸ் நகர அழகு, பிரெஞ்சுக்காரர் ஊக்கம் இவற்றைக் கவனித்தார்; ஜெர்மனியில் விஞ்ஞான வளர்ச்சியைக் கண்டார்; கெய்சர் ஆட்சியில் மக்கள் கொண்டிருந்த மன வன்மையை உணர்ந்தார்; அழகுக்கு இருப்பிடமான சுவிட்ஸர்லாந்து சென்றார்; இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புற்றார்; சிற்பத் தொழிலுக்குப் பெயர்போன இத்தாலி நாட்டைப் பார்வையிட்டார்; ரோம், வெனீஸ் போன்ற திருநகரங்களைக் கண்குளிரக் கண்டார்; பின்னர்க் கப்பல் ஏறித் தாய்நாடு மீண்டார்.

## மகிழ்ச்சி நிறைந்த வரவேற்பு

தம் தவ மைந்தரை வரவேற்கப் பெற்றோர் உணர்ச்சியுடன் காத்திருந்தனர்; தங்கை விஜயலக்ஷ்மியும் அவருக்குப் பின் 1907-ல் பிறந்த கிருஷ்ணு என்ற ஐந்து வயதுடைய தங்கையும் தம் தமையனரைக் காண அவாவினர். அவர்கள் அகமும் முகமும் ஒருங்கே மலரப் பாரிஸ்டர் ஜவாஹர் ஆனந்த பவனத்தை அடைந்தார்.

## 5. திருமணம்

### வழக்கறிஞர் தொழில்

ஆனந்த பவனத்தை அடைந்த ஜவாஹர் இலாஹபாத் உயர்நீதி மன்ற வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டார்; தொடக்கத்தில் ஊக்கமாகத் தொழில் புரிந்து வந்தார்; தந்தையாருடன் இருந்து வழக்குகளைச் சோதனை செய்வதில் திறமை பெற்றார்; வழக்கினை விவாதிப்பதிலும் போதிய பயிற்சி பெறலானார்.

### தங்கைமார்க்குக் கல்வி உதவி

ஜவாஹர் தம் ஓய்வு நேரங்களில் தம் தங்கைமார்க்குக் கல்வி கற்பித்து வந்தார்; அவர்களை மிக்க அன்புடன் நடத்திவந்தார்; இரவு வேளைகளில் உணவுண்ட பிறகு அவர்கட்குப் பல நாட்டுக் கதைகளைக் கூறிவந்தார்; கரிபால்டி, நெப்போலியன், லெனின் முதலியோர் வரலாறுகளை அழகாகக் கூறினார்; நம்நாட்டு வீரர்களான சமுத்ர குப்தர், பத்மினி, சிவாஜி முதலியோர் வரலாறுகளைக் கூறினார்; அவர்கட்குக் கணிதம், ஆங்கிலம் முதலிய பாடங்களைக் கற்பித்து வந்தார்; நம் நாட்டுப் பண்டைச் சிறப்பினையும் ஆங்கில ஆட்சியில் நாடு உரிமையற்று இருப்பதனையும் பல மேற்கோள்களுடன் விளக்கினார்.

## இந்திய ஊழியர் சங்கம்

மஹாராஷ்டிரப் பெரியாரான கோபால கிருஷ்ண கோகலே பூனவில் இந்திய ஊழியர் சங்கத்தை ஏற்படுத்தினர். அதன் உறுப்பினர் தம் உடல்-பொருள்-ஆவி மூன்றையும் நாட்டுக்காக அர்ப் பணம் செய்து, நாட்டு மக்கட்குத் தொண்டு செய் வதே அச் சங்கத்தின் நோக்கமாகும். 'நாட்டுக்குத் தொண்டு செய்யவேண்டும்' என்பதனை மந்திரமாக உச்சரித்துக்கொண்டிருந்த ஜவாஹர் அந்தச் சங்கத்தைப் பெரிதும் விரும்பினர்; தந்நலமற்ற வீரர்களான அதன் உறுப்பினரைப் பாராட்டினர். அதனைத் தோற்றுவித்த கோகலேயினிடம் அவர் கொண்ட மதிப்பு அளவிடற்கரியது.

## காங்கிரஸ் உறுப்பினர்

ஜவாஹர் தீவிரப் போக்கு உடையவர். அவருக்கு எப்பொழுதும் வேலை இருக்கவேண்டும். அந்த வேலை நாட்டுக்கு நன்மை விளைப்பதாக இருத்தல் வேண்டும். அதனல் அவர் காங்கிரஸ் இயக்கத்திற் சேர்ந்து வேலை செய்யலானர்.

## 'தம் ஆட்சி இயக்கம்'*

1914-ல் முதல் உலகப்போர் தொடங்கியது. இந்திய அரசாங்கம் அப்போருக்கு ஆட்களைச்

*Home Rule Movement

சேர்ப்பதில் முனைந்தது. 'தன் ஆட்சி இயக்கம்' என்ற பெயரால் இரண்டு இயக்கங்கள் தோன்றின. ஒன்றுக்குத் திலகர் தலைவரானார்; அன்னி பெசன்ட் அம்மையார் மற்றொன்றுக்குத் தலைவரானார். நாடெங்கும் பரப்பரப்பான சொன்மாரிகள், ஊர்வலங்கள் முதலியன நடைபெற்றன; அவற்றைத் தடுக்க அரசாங்கத்தார் அடக்குமுறைச் சட்டங்கள் தாண்டவமாடின. வீர இளைஞரான ஜவாஹர் இரண்டு இயக்கங்களிலும் சேர்ந்து பணி புரிந்தார்; அரசாங்கத்தார் பிறப்பித்த அடக்குமுறைச் சட்டத்தைக் கண்டித்து ஜவாஹர் 1915-ல் முதன் முதல் இலாஹபாத்திற் கூடிய பெருங் கூட்டத்திற் பேசினார்.

ஆவேசமான சொற்பொழிவுகளைச் செய்து அரசாங்கத்தைக் கண்டித்து வந்த காரணத்தால் பெசன்ட் அம்மையார் சிறைப்பட்டார். அது முதல் மோதிலால் மிதவாதத் தன்மையில் இருந்து தீவிரவாதியாக மாறினார்; அம்மையாரது இயக்கத்திற் சேர்ந்து வேலை செய்யலானார். "பேச்சாற் பயனில்லை; செயலாற்ற வேண்டும்" என்பது ஜவாஹர் கொள்கை. தந்தையார், "அவசரப்படாதே. அவசரம் அல்லல் விளைக்கும்" என்றார். இங்ஙனம் அடிக்கடி தந்தையாருக்கும் மைந்தர்க்கும் வாதம் நடைபெற்றது.

## காந்தியடிகள்

1916-ல் லக்ஷ்மணபுரியில் காங்கிரஸ் பேரவை கூடியது. அங்குக் காந்தி அடிகள் காட்சி அளித்தார். அவர் பல ஆண்டுகள் தென் ஆப்பிரிக்காவில் இருந்து அங்கிருந்த இந்தியர் துயரங்களைப் போக்க அரும்பாடு பட்டவர்; சிறை வாழ்க்கை பெற்றவர். அவரது சிறப்பு இந்தியா முழுவதும் பரவி இருந்தது. ஜவாஹர் அவரைப்பற்றி நிரம்பக் கேள்விப்பட்டிருந்தார்; ஆனால் நேரிற் பார்த்ததில்லை; காங்கிரஸ் பேரவையில் அவரைக் கண்டதும் மனமுருகி அவருக்கு வணக்கம் செலுத்தினர். அன்று அவ்விருவர்க்கும் உண்டான நட்பு நல்லவர் நட்பாதலின் இன்றுவரை நீடித்து நலன் விளைத்து வருகின்றது.

## ஜவாஹருக்குத் திருமணம்

1916-ல் மோதிலால் ஜவாஹருக்குத் திருமணம் செய்யக் கருதினர்; தம் மரபைச் சேர்ந்த அறிஞர் ஒருவர் மகளாரை மணம் பேசி முடித்தார். அப்பொழுது அப்பெண்மணியார்க்கு வயது பதினேழு. ஜவாஹருடன் பலமுறை சிறை சென்று நோய்வாய்ப்பட்டு ஐரோப்பாவில் உயிர் துறந்த கமலா நெஹ்ரு என்பவர் அந்த அம்மையாரே ஆவர். அவர் சொரூபராணி அம்மையாருடைய குண நலங்கள் அனைத்தையும் பெற்றவர்; ஆங்கிலம்,



ஜவாஹர்லால்
நெஹ்ரு



கமலா நெஹ்ரு

இந்தி இவற்றில் வல்லவர் ; ஜவாஹரைப் போலவே நாட்டுப் பற்றிற் சிறந்தவர் ; அச் சிறுவயதிலேயே அஞ்சா நெஞ்சம் படைத்தவர். இத்தகைய குண நலங்களை உடைய பெண்மணியாரைத் தம் மைந்தர்க்கு வாழ்க்கைத் துணைவியாராகச் செய்ய மோதிலால் முயன்றது பொருத்தமன்றோ ?

மணப்பெண் இருந்த டெல்ஹியில் திருமணம் நடைபெற்றது. இலாஹபாத்திலிருந்து தனிப் புகைவண்டி ஒன்று மோதிலால் குடும்பத்தினரையும் உற்றார் - உறவினர் - நண்பரையும் திருமணத்திற்காக ஏற்றிச் சென்றது. திருமணத்திற்கென்று இந்தியா முழுவதிலுமிருந்து தலைவர் பலர் சென்றிருந்தனர் ; பெரிய அரசியல் உத்தியோகஸ்தர்கள் சென்றனர். அனைவருக்கும் விடுதிகள் அமைக்கப் பட்டன ; எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டன. குறித்த நல்லோரையில் திருமணம் மிக்க சிறப்புடன் நடைபெற்றது. வந்திருந்த பெரியோர்கள் அனைவரும் மணமக்கட்கு வாழ்த்துக் கூறினர்.

## இன்ப வாழ்க்கை

"காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என்று பெரியோர் கூறியது உண்மையாகும். ஜவாஹரும் கமலாவும் மனம் ஒத்து வாழ்க்கை நடத்தினர் ; ஒருவர் சொல்லை ஒருவர் மீறுவதில்லை. இருவரும் மணமும் மலரும் போலவும் நகமும் சதையும் போலவும் ஒன்றுபட்ட

உணர்ச்சி உடையவராய் வாழ்ந்தனர். நாட்டுப் பணியில் கணவரைப் பின்பற்றித் தம் கடனைச் செய்யக் கமலா என்றுமே தவறியதில்லை. அவர்கள் இன்ப வாழ்க்கையின் பயனாகப் பிறந்தவர்தாம் இந்திரா நெஹ்ரு என்பவர்.

## 6. நாட்டுத் திருப்பணி—I

### உலகப் போருக்குப் பின்

முதல் உலகப் போருக்குப் பிறகு, அப்போரில் வெற்றி பெற்ற பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு உரிமை வழங்க மறுத்தது; உரிமை இயக்கத்தை அடக்குமுறைச் சட்டங்களைக்கொண்டு நசுக்கவும் துணிந்தது. காந்தியடிகள் வேண்டுகோளையும் மீறி அடக்குமுறைச் சட்டங்கள் தோன்றின. மக்கள் கொதிப்படைந்து பல இடங்களில் கலவரங்களை உண்டாக்கினர். போலீசார் அவர்களைத் தடியாலடித்தனர்; சில இடங்களில் துப்பாக்கியாற் சுட்டனர். அங்ஙனம் சுடப்பட்ட இடங்களில் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த அமிர்தசரஸ் ஒன்று. அங்குக் கூட்டத்தில் அகப்பட்டுக்கொண்ட தாய்மாரும் பிள்ளைகளும் ஈவு இரக்கமின்றிச் சுடப்பட்டனர். இந்த நிகழ்ச்சி 1919-ல் நடந்தது.

பஞ்சாபில் நடந்த இக் கொடுமைகளை விசாரிக்கக் காங்கிரஸ் சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில் சித்தரஞ்சன தாஸ், மோதிலால்

நெஹ்ரு முதலியோர் இடம் பெற்று இருந்தனர். அமிர்தசரஸில் நடந்த கொடுமையை விசாரிக்கச் சித்தரஞ்சனதாஸ் அனுப்பப்பட்டார். அப்பொழுது அவருக்கு உதவியாக நமது ஜவாஹர் சென்றிருந்தார்.

## மோதிலால் மன மாற்றம்

பஞ்சாபில் விசாரணை நடத்தி மீண்ட மோதிலால் மனம் முற்றும் மாறிவிட்டது. சட்ட வரம்புக்கு உட்பட்ட கிளர்ச்சியில் அவருக்கு இருந்த நம்பிக்கை கதிரவனைக் கண்ட காரிருளைப் போல அகன்றது. காந்தியடிகளின் ஒத்துழையா இயக்கத்திற் சேர்ந்து தொண்டாற்றுவதே சிறந்ததென்று அவர் உறுதி கொண்டார்; தம் மைந்தர் முதலிலிருந்து கொண்டிருந்த கொள்கையே சரி என்று எண்ணினர். அதனல் அவர் தம் தொழிலை விட்டார்; அதுவரை செய்துவந்த ஆடம்பரமான செலவைக் குறைத்துவிட்டார்; எளிய வாழ்க்கை வாழத் தொடங்கினர். அவரது வியத்தகு மாறுதலைக் கண்ட ஜவாஹர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை; இனித் தாமும் தந்தையாரும் ஒத்த மனத்தினராய் நல்ல முறையில் நாட்டுத் திருப்பணி செய்யலாம் என்று எண்ணிக் களித்தார்.

## குடியானவர் நிலைமை

செல்வத்தில் வளர்ந்திருந்த ஜவாஹருக்குக் குடியானவரது துன்பநிலையை உள்ளவாறு அறிய

வாய்ப்பு இல்லாதிருந்தது. அவர் 1920-லும் 1921-லும் இலாஹபாத்தைச் சுற்றியிருந்த சிற்றூர்களைக் காணச் சென்றார்; அப்பொழுது அங்கு இருந்த குடியானவருடன் நெருங்கிப் பழகினர்; அவர்கள் வரவு-செலவுகளை விசாரித்தார்; குடும்ப நிலையைப் பற்றிப் பல கேள்விகளைக் கேட்டார். குடியானவர் குறைகளைக் கேட்கக் கேட்க அவர் தம்மை மறந்து கண்ணீர் விட்டார். இந்தியக் குடியானவர்க்குள்ள வறிய நிலையை அவர் அப்பொழுதுதான் உணர்ந்தார்; "இவர்கள் நிலைமை உயராதவரை நாட்டுப் பொருளாதார நிலை ஒரு போதும் உயராது" என்று எண்ணி வருந்தினர்.

## ஒத்துழையாமை இயக்கம்

1920-ல் கல்கத்தாவில் காங்கிரஸ் பேரவை கூடியது. லாலா லஜபதிராய் அதற்குத் தலைவராக இருந்தார். அந்தப் பேரவையில் 'அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதில்லை' என்று காங்கிரஸ் தீர்மானித்தது; பட்டங்களைத் துறத்தல், வெளி நாட்டுத் துணிகளைத் துறத்தல் என்பன முடிவு செய்யப்பட்டன. காந்தியடிகளைத் தலைவராகக் கொண்ட காங்கிரஸ் இத்தீர்மானப்படி நடக்கத் தொடங்கியது; "வெளிநாட்டுத் துணிகளை வாங்காதீர்கள்; அரசாங்கத்துடன் ஒத்துழையாதீர்கள்" என்ற பிரசாரம் நாடெங்கும் பலப்பட்டது.

## முதல் சிறை வாழ்க்கை

1921 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வேல்ஸ் இளவரசர் இந்தியாவைப் பார்க்க வந்தார். அவரை வரவேற்கக் கூடாதென்பது காங்கிரஸ் முடிவு. ஆதலின், அரசாங்கம், 'காங்கிரஸ் தலைவர்களைச் சிறைப்படுத்திவிடின், பொது மக்கள் எதிர்ப்புணர்ச்சியைக் காட்ட மாட்டார்கள்' என்று எண்ணித் தலைவர்களைச் சிறை செய்தது. மோதிலாலும் நமது ஜவாஹரும் சிறைப்பட்டனர். தலைவர்கள் சிறைப்பட்டதன் பயனாக ஒத்துழையாமை இயக்கம் வன்மை பெற்றது. உரிமை வேட்கை நாடெங்கும் பரவியது.

## மீண்டும் சிறைவாழ்வு

ஜவாஹர் மூன்று திங்கள் கழித்து விடுதலை அடைந்தார். அவர் வெளிவந்த பொழுது காந்தியடிகள் சிறைப்பட்டார். ஜவாஹர் அடிகளைச் சிறைக் கூடத்திற் சந்தித்துப் பேசி இலாஹபாத்தை அடைந்தார்; ஒன்றரைத் திங்களுக்குப் பிறகு, வெளிநாட்டுத் துணிக்கடை மறியல் செய்யத் தொடங்கினர்; அதனால் ஒன்றேமுக்கால் ஆண்டு காவல் தண்டனை பெற்றார்; 1923 ஜனவரி இறுதி நாளன்று விடுதலை பெற்றார்.

## நகராண்மைக் கழகத் தலைவர்

ஜவாஹர் வெளிவருவதற்குள் காங்கிரஸில் இரண்டு கட்சிகள் தோன்றின; ஒன்று சட்ட சபைக்குச் செல்லத் தீர்மானித்தது; பிறிதொன்று காந்தியடிகளைப் பின்பற்றியது. முன்னதற்குத் தலைவர் சித்த ரஞ்சன தாஸர் ஆவர். அவருக்கு ஆதரவு மிகுந்தது. நாட்டில் இருந்த நகராண்மைக் கழகங்களைக் காங்கிரஸ்காரர் கைப்பற்றினர்; சித்தரஞ்சனர் கல்கத்தா நகராண்மைக் கழகத் தலைவரானர். சர்தார் படேல் அஹமதாபாத் நகராண்மைக் கழகத் தலைவரானர். இலாஹபாத் நகராண்மைக் கழகத்திற்கு நமது ஜவாஹர் தலைவரானர். அவர் அந்த நகரத்தில் பல மாறுதல்களைச் செய்தார்; நகர சுகாதாரத்தைப் பெருக்கினர்; பல இடங்களில் நூல் நிலையங்களையும் படிப்பகங்களையும்* தோற்றுவித்தார்; இலவச - தொடக்க நிலைப் பள்ளிகளையும் தோற்றுவித்தார். இலாஹபாத் மக்கள் அவரது திருப்பணியை உள்ளங் குளிர்ந்து பாராட்டினர்.

## சம்ஸ்தான அநுபவம்

1923 - ல் ஜவாஹர் நாபா என்னும் சம்ஸ்தானத்தில் நடைபெற்ற சட்டமறுப்பு இயக்கத்தைப் பார்க்கத் தம் நண்பர் இருவருடன் சென்றார். அச் சம்ஸ்தான போலீசார் அவரைச் சிறைப்படுத்தி

* வாசக சாலைகள்.

விலங்குபூட்டித் தெருக்கள் வழியே இழுத்துச் சென்றனர்; மூவரையும் ஒருவரோடு ஒருவர் சேர்த்து விலங்கிட்டுச் சுகாதார வசதியற்ற இருட்டறை ஒன்றில் தள்ளினர். பாவம்! மூவரும் அந்த அறையில் தூங்கவோ, உட்காரவோ முடியாது தவித்தனர். எலிகள் அவர்கள்மீது குதித்து விளையாடின.

இரண்டு நாட்களுக்குப் பிறகு விசாரணை நடந்தது. சிறைப்பட்டோர் சார்பில் வெளி ஊர் வழக்கறிஞர் அநுமதிக்கப்பட்டிலர்; சிறைப் பட்டோர்க்குச் சில வசதிகள் செய்துதர நாபா சம்ஸ்தான சட்டத்தில் இடமில்லை என்று கூறப் பட்டது. ஒரே நாளில் இரண்டு நீதிபதிகள் மாறி மாறி உட்கார்ந்து வழக்கை விசாரித்தனர். வழக்கில் சாட்சி கூறினோர் அனைவரும் பொய்யே கூறினர். விசாரணை பல நாட்கள் நடந்தது. முடிவில் சிறைப் பட்டோர் ஒவ்வொருவருக்கும் இரண்டு வருடம் தண்டனை கிடைத்தது.

அடுத்த நிமிடமே இரண்டு ஆணைகள் பிறந்தன; ஒன்று தண்டனை நிறுத்தப்பட்டது என்பது; மற் றொன்று இனி முன் அநுமதி பெறாது சம்ஸ்தானத் திற்குள் வரலாகாது என்பது. போலீசார் இந்த ஆணைத்தாள்களை மூவர்க்கும் காட்டினர்; ஆனால் அவற்றின் படிகளைக் கொடுக்க மறுத்துவிட்டனர். அன்றிரவே மூவரும் அச்சம்ஸ்தானத்தை விட்டு வெளியேறினர்.

ஜவாஹருக்கு அப்பொழுதுதான் இந்தியச் சம்ஸ்தான அரசாங்க நடைமுறை பற்றிக் கவலை பிறந்தது. சம்ஸ்தானத்துக்குக் குடிமக்கள் நிலையை எண்ணி அவர் நடுங்கினார்; "ஒவ்வொரு சம்ஸ்தானத்திலும் குடிகள் விழிப்புற்று வாழக் காங்கிரஸ் இயக்கம் தேவையாகும்" என்று எண்ணினார்; தமது எண்ணத்தை நாடெங்கும் பிரசாரம் செய்தார். ஜவாஹர் இப்பொழுதும் சம்ஸ்தான மக்கள்மீது மிகுந்த கவலை கொண்டிருப்பதற்கு மேற்சொன்ன அவரது சொந்த அநுபவமே சிறந்த காரணமாகும்.

## காங்கிரஸ் செயலாளர்

1924-ஆம் ஆண்டில் மௌலானா முஹம்மத் ஆலி காங்கிரஸ் தலைவராக இருந்தார். அவர் விருப்பத்துக்கு இணங்கி ஜவாஹர் காங்கிரஸ் செயலாளர் பதவியை ஏற்றுக்கொண்டார்; ஓய்வின்றிக் காங்கிரஸ் இயக்க நடைமுறைகளைக் கவனித்து வந்தார்; ஆங்காங்குச் சங்கங்களை அமைத்தல், சொற்பொழி வாற்றல், மாகாண இயக்கங்களுடன் நடைபெற்ற கடிதப் போக்கு வரவுகளைக் கவனித்தல் முதலிய பலவேலைகள் அவர் நேரத்தைக் கொள்ளை கொண்டன.

1925-ல் காந்தியடிகள் காங்கிரஸ் தலைவராக இருந்தார். அந்த ஆண்டும் ஜவாஹரையே செயலாளராக இருக்கும்படி அடிகள் வற்புறுத்தினார். அடிகள் ஜவாஹரது களங்கமற்ற உள்

ளத்தை நன்கு அறிந்தவர்; அவர் நாட்டுப் பணிக்கு உடல் - பொருள் - ஆவி ஆகிய மூன்றையும் விட விரும்பியவர் என்பதைத் தெளிவாக உணர்ந்தவர். ஆதலாற்றான் அவர் ஜவாஹரைத் தம் உயிராகக் கருதி வந்தார்.

## ஐரோப்பிய யாத்திரை

ஜவாஹருடைய தாயாருக்கும் மனைவியார்க்கும் உடல் நலிவு உண்டானதன் காரணமாக அவர்களை அழைத்துக்கொண்டு ஜவாஹர் 1926-ஆம் ஆண்டு ஐரோப்பாவிற்குப் பிரயாணமானார்; அவர்களுடன் விஜயலக்ஷ்மியும் அவர் கணவரும் புறப்பட்டனர். அனைவரும் உடல் நலத்துக்கேற்ற ஜினிவாவில் தங்கியிருந்தனர். அப்பொழுது அங்குக் கோடைக் காலமாதலின் ஐரோப்பிய நாடுகள் பலவற்றி லிருந்தும் அரசியல் அறிஞர், விஞ்ஞானப் பேராசிரியர், புகழ்பெற்ற நூலாசிரியர் முதலியோர் அங்கு ஏற்பட்டிருந்த கோடைக்காலப் பள்ளிக்கு வந்து சொற்பொழிவாற்றினர். ஜவாஹரும் அவர் தங்கை கிருஷ்ணாவும் அப்பள்ளியிற் சேர்ந்து, விலை மதிப்பற்ற அச் சொற்பொழிவுகளைக் கேட்டனர். ஜவாஹர் ஜினிவாவில் இருந்த எல்லா நாட்டுக் கழகம், * எல்லா நாட்டுத் தொழிலாளர் அலுவலகம் † ஆகிய இரண்டிற்கும் சென்றார்; அவற்றின் நடை முறைகளைக் கவனித்தார்.

* சருவதேச சங்கம்

† சருவதேசத் தொழிலாளர் காரியாலயம்

## ரோமேன் ரோலண்ட்

ஜினிவாவுக்கு அருகில் ரோமேன் ரோலண்ட் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் புகழ் பெற்ற பிரெஞ்சு நூலாசிரியர்; சிறந்த ஒழுக்கமும் பக்தியும் உடையவர். அவர் காந்தியடிகளுக்கு அன்பர். ஜவாஹர் அப் பெரியாரைப் பார்க்கக் காந்தி அடிகள் கொடுத்திருந்த அறிமுகக் கடிதத்துடன் சென்றார்; உலகப் புகழ்பெற்ற அப் பிரெஞ்சு ஆசிரியரைக் கண்டு நெடுநேரம் அளவளாவினர். ஜவாஹர் ஐரோப்பாவில் இருந்தபொழுது அவரைப் பலமுறை சென்று கண்டார்.

## அடக்கப்பட்ட நாடுகள் மாநாடு

'அடக்கப்பட்ட நாடுகள் மாநாடு' ஒன்று 1927-ல் பிரஸ்ஸல்ஸ் நகரில் கூடியது. அதற்கு ஜாவா, இந்துசீனம், பாலஸ்தீனம், சிரியா, எகிப்து, வட ஆப்பிரிக்க அரபு நாடு முதலிய நாடுகளி லிருந்து பிரதிநிதிகள் வந்தார்கள். இந்தியக் காங்கிரஸ் ஜவாஹரை அந்த மாநாட்டுக்கு அனுப்பியது. ஜவாஹர் மாநாட்டுச் செயல் முறை களில் பங்கெடுத்துக்கொண்டார்; பற்பல நாடுகளின் துயரங்களை அவ்வவ் நாட்டுப் பிரதிநிதிகள் பேச்சி லிருந்து நன்கு அறிந்தார்; அந்த மாநாட்டுப் பிரதி நிதிகள் அனைவருடனும் கலந்து பேசினர்.

**பல நாடுகளைக் காணுதல்**

மோதிலால் 1927-ல் ஜினிவாவை அடைந்தார். பிறகு அனைவரும் பிரான்ஸ், ஜெர்மனி, ருஷ்யா முதலிய நாடுகளைச் சென்று கண்டனர்; அங்கங்கு நடைபெற்று வந்த தொழில்கள், தொழிற்சாலைகள், விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள், கண்காட்சிச் சாலைகள் முதலியவற்றைப் பார்வையிட்டனர்; அரசியல் வாதிகள் பலரைக் கண்டு பேசினர்; ருஷ்யாவில் ருஷ்யத் தலைவரான லெனின் கல்லறையைக் கண்டனர்; லெனின் உடம்பைத் தைலத்தில் இட்டு அழியாதபடி பதனிட்டுக் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தனர்; ருஷ்ய மக்கள் அங்குச் சென்று லெனினுக்குத் தங்கள் வணக்கத்தைச் செலுத்தி மீண்டதைக் கண்டு வியந்தனர். சிறைக் கூடங்களில் காவல் மிகுதியாக இல்லை; சிறைப்பட்டோர் அறைக் கதவுகள் திறந்தே இருந்தன. அவர்கள் மகிழ்ச்சியோடு தமக்கு விருப்பமான வேலைகளைச் செய்து கொண்டு இருந்தார்கள். உள்ளிருந்த காவலாளிகளிடம் ஆயுதங்கள் இல்லை. வெளியில் இருந்த காவலாளி ஒருவனே துப்பாக்கியுடன் இருந்தான். சிறைக் கூடங்கள் சுகாதார வசதி நிறைந்து காணப்பட்டன. மோதிலாலும் ஜவாஹரும் ருஷ்ய நாட்டுச் சிறைக் கூடங்களைக் கண்டு, அவற்றுக்கும் தாம் இருந்த சிறைகூடங்கட்கும் இருந்த வேறுபாட்டை எண்ணி வருந்தினர்.

## ஸர் ஜான் சைமன்

இவர் இங்கிலாந்தில் பெயர் பெற்ற வழக்கறிஞர். இந்திய ஜமீன்தாரி வழக்கொன்றின் சார்பாக இவர் வாதாடினர். இவருக்கு உதவியாக மோதிலால் பிரிவி கவுன்ஸிலில் தோன்றினர். மோதிலாலும் ஜவாஹரும் சைமனைக் கண்டு இந்திய அரசியல் பற்றிப் பேசினர்; சைமன் நட்பு முறையில் பழகினர்.

இந்தியாவுக்கு எத்தகைய அரசியல் சீர் திருத்தங்களை வழங்கலாம் என்பதை இந்தியத் தலைவர்களைக் கலந்து ஒரு திட்டம் தயாரிக்கும்படி ஆங்கில அரசாங்கத்தார் ஒரு குழுவினை அமைத்தனர். அக்குழுவிற்கு ஸர் ஜான் சைமனே தலைவராக நியமனம் பெற்றார். அக்குழுவினர் 1928-ல் இந்தியா சென்றனர். அவர்கட்குமுன் ஜவாஹரும் மற்றவரும் இந்தியா மீண்டனர்.

## சென்னையில் காங்கிரஸ் பேரவை

ஜவாஹர் நேரே கொழும்பு வழியாகச் சென்னையை அடைந்தார்; அப்பொழுது காங்கிரஸ் பேரவை சென்னையிற் கூடியது. இங்கிலாந்தில் ஜவாஹருடன் நெருக்கமாகப் பழகிய டாக்டர் அன்சாரி காங்கிரஸ் தலைவரானர். அவர் வேண்டுகோள்மீது ஜவாஹர் காங்கிரஸ் அமைச்சராக இருக்க இசைந்தார். 'சைமன் தூதுக்குழுவை

ஒதுக்குதல் வேண்டும்' என்று பேரவை தீர்மானித்தது.

## போலீஸ் தடியடி

சைமன் குழுவினர் இந்தியாவிற் சென்ற இடமெல்லாம் கறுப்புக் கொடிகளையும் பொதுமக்கள் எதிர்ப்பு ஓசையையும் கண்டனர்; கேட்டனர். இந்திய அரசாங்கத்தார் காங்கிரஸ் தலைவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஜவாஹர் அணிவகுத்துச் சென்ற கறுப்புக் கொடி ஊர்வலத்தைக் குதிரைப் படைகள் கலைத்தன; குதிரை வீரர் அவரைக் கண்டவாறு தடிகொண்டு தாக்கினர். அரச போகத்தில் வளர்ந்து வந்த தவ மைந்தர் நாட்டு விடுதலைக்கு உழைக்க வந்து, போலீசாரிடம் தடியடி பெற்றார். அவர் உடல் கன்றியது. ஆயினும் அவர் இருந்த இடத்தை விட்டு நகரவே இல்லை. அடிமேல் அடி விழுந்து கொண்டே இருந்தன. இறுதியில் அவருடன் வந்த நண்பர்கள், பின்பக்கமாக வந்து அவரைத் தூக்கிக் கொண்டு சென்றனர். அவரது மென்மை வாய்ந்த திருமேனி நலம்பெறப் பல நாட்கள் ஆயின.

## மோதிலால்-காங்கிரஸ் தலைவர்

1928-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் காங்கிரஸ் பேரவை கல்கத்தாவிற் கூடியது; அது மோதிலாலைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது;

ஜவாஹரைச் செயலாளராக இருக்குமாறு வேண்டியது. தந்தையார் காங்கிரஸ் தலைவர் ஆனார்; மைந்தர் செயலாளர் ஆனார். இந்தப் பேறு வேறு எக்குடும்பத்தினர்க்குக் கிடைக்கும்! 1929-ல் மோதிலால் தலைமையில் காங்கிரஸ் நாடெங்கும் நன்கு பரவியது; பெரிய கிராமங்களில் எல்லாம் காங்கிரஸ் சங்கங்கள் தோன்றின. காந்தியடிகள் நாடெங்கும் சுற்றிக் கதர்ப் பிரசாரம் செய்தார். ஜவாஹர் பல மாகாணங்களுக்கும் சென்று இயக்கத்தை வேரூன்றச் செய்தார்.

## ஜவாஹர் – காங்கிரஸ் தலைவர்

1930-ஆம் ஆண்டில் நமது ஜவாஹர் காங்கிரஸ் தலைவராக இருக்கவேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினர். அவர் விருப்பத்தின்படி லாஹூரில் கூடிய காங்கிரஸ் பேரவை ஜவாஹரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. முன்னைய தலைவரான மோதிலால் அடுத்துத் தலைவரான தம் மைந்தரிடம் காங்கிரஸ் தலைமைப் பதவியை ஒப்புவித்தது கண்டு களிக்கத் தக்கதாக இருந்தது. அப் பேரவையில் 'முழு உரிமையே காங்கிரஸின் குறிக்கோள்' என்பது விளக்கமாயிற்று.

## உப்புப் போராட்டம்

1930-ல் காந்தியடிகள் உப்பு வரியை எடுத்து விட வேண்டும் என்று வைசிராய்க்கு வேண்டுகோள் விடுத்தார். அது கவனிக்கப்படாமையால்

'உப்புப் போர்' தொடக்கமாயிற்று. அடிகள் கடற்கரைக்குச் சென்று உப்புக் காய்ச்சத் தொடங்கினர். அவர் வழிகாட்ட, இந்தியா முழுதிலும் இருந்த காங்கிரஸ்காரர்கள் தத்தம் ஊர்களை அடுத்த கடற்கரையில் உப்புக் காய்ச்சத் தொடங்கினர். கள்ளுக்கடை, வெளிநாட்டுத் துணிக் கடை இவற்றின்முன் நின்று உட்செல் வோர்க்கு நல்லறிவு கொளுத்தத் தொண்டர்கள் ஊர்தோறும் பயிற்சி அளிக்கப்பட்டார்கள். ஜவாஹரின் மனைவியாரான கமலாவும் தங்கையா ரான கிருஷ்ணாவும் ஆண் உடை தரித்துத் தொண்டர் படையில் பயிற்சி பெற்றனர். பயிற்சி பெற்ற தொண்டர்கள் (கதருடை அணிந்து) கள்ளுக் கடைகட்கு முன்பாக நின்று, கள் குடிக்கச் செல்வோரைக் கைகுவித்து வணங்கி, "கள் குடி யினால் உங்கள் உடல் கெடும்; குடும்பம் செலவுக்குத் துன்பப்படும்; இப்பழக்கத்தை விட்டு விடுக" என்று வேண்டி நின்றனர். ஒரு பகுதித் தொண்டர்கள் துணிக் கடைகட்கு முன் நின்று, வெளிநாட்டுத் துணிகளை வாங்கச் செல்வோரை வணங்கி, "பிற நாட்டுத் துணிகளை வாங்குவதால் நம் நாட்டுப் பணம் வெளிச் செல்கிறது. நம் நாட்டு நெசவாளர் தொழிலின்றி வாடுகின்றனர். நம் நாட்டுத் துணிகளையே வாங்குக" என்று கூறி மன்றாடினர்.

அரசாங்கம் வாளா இருந்ததா? நாடெங்கும்

போலீசார் தடிகளுடன் காட்சி அளித்தனர். காந்தி யடிகள் அரசாங்க உப்பளங்களிற் புகுந்து உப் பெடுக்கத் துணிந்த பிறகே சிறைப்பட்டார். அடிகட்கு முன்னரே காங்கிரஸ் தலைவரான ஜவாஹர் சிறைப்பட்டனர். அவர் தந்தையாரும் பிற தலைவர்களும் சிறைப்படுத்தப்பட்டனர்.

## மோதிலால் உடல் நிலை

மோதிலால் இன்பமாகக் காலங் கழித்தவர்; மாட மாளிகைகளில் நடமாடியவர். அவர் காந்தி யடிகளைப் பின்பற்றிய நாள் தொட்டு அவரது வாழ்க்கை (உணவு - உடை - மன நிலை) முழுவதுமே மாறுதல் அடைந்தது. கொடிய சிறை வாழ்க்கை அவரது உடல் நிலைக்கு ஏற்கவில்லை; உணவு வகைகள் ஏற்கக் கூடியனவாக இல்லை. ஆதலின் அவர் உடல் நிலை தளர்ந்தது. அவர் நோய்வாய்ப் பட்டார். அந்நிலையிலும் அப்பெரியார் உப்புப் போர் தொடங்கச் சென்ற காந்தி அடிகளைக் காணப் பிரயாணம் செய்தார்; தண்டியை நோக்கிச் சென்ற அடிகளைச் சந்தித்து வணங்கினர்; தமது ஆனந்த பவனத்தைச் 'சுயராஜ்ய பவனம்' என்று பெயரிட்டு நாட்டுக்கு வழங்குவதாகத் தெரிவித்தார். அடிகள் அவரது தியாகத்தை எண்ணி மகிழ்ந்து அவரைத் தழுவிக்கொண்டார். தமது இன்ப வாழ்வுக்காகக் கட்டிய பெரிய மாளிகையை நாட்டுக் களித்த அப் பெரியவர் ஓய்வெடுக்கவில்லை; உப்புப் போரில்

ஈடுபட்டுச் சிறைப்பட்டார். அப்பொழுது அவரது நோய் மிகுதிப்பட்டது. உடனே அரசாங்கம் அவரை விடுதலை செய்துவிட்டது. மோதிலால் உடல் நலங்கருதி முசோரியில் தங்கினர். சொரூப ராணியார் தம் கணவருக்குரிய பணிவிடைகளைச் செய்து வந்தார்.

## மீண்டும் சிறைப்படல்

ஜவாஹர் ஆறுமாதச் சிறை வாழ்க்கைக்குப் பிறகு விடுதலை அடைந்தார்; முசோரிக்குச் சென்று பெற்றோரைப் பார்த்துவிட்டு இலாஹபாத்துக்கு வந்தார்; அங்குச் சுயராஜ்ய பவனத்தை அடுத்துத் தமக்கென்று கட்டப்பட்டிருந்த மாளிகையில் தங்கினர். அவரும் கமலாவும் வரிகொடா இயக்கப் பிரசாரத்தில் இறங்கினர். குறிப்பிட்ட ஒரு நாளில் இலாஹபாத்தில் குடியானவர் பெருங் கூட்டம் ஒன்று கூடியது. அந்த நாளில் தந்தையார் தம்மைக் காண வருவதாக ஜவாஹருக்குக் கடிதம் வந்தது. அதனால் அவரும் கமலாவும் புகைவண்டி நிலையத்திற்குச் சென்றனர். வண்டி குறிப்பிட்ட நேரத்தில் அங்கு வரவில்லை. அதனை எதிர் நோக்கியிருப்பின் குடியானவர் கூட்டத்தைக் குறித்த நேரத்தில் தொடங்கமுடியாது. ஆதலின் ஜவாஹர் தம் மனைவியாருடன் நேரே கூட்டத்திற்குச் சென்றுவிட்டார்.

வண்டி நேரங்கழித்து வந்தது. மோதிலால் நேரே தமது மாளிகையை அடைந்தார். அன்றைய

கூட்டத்தைப் பற்றிக் கேள்வியுற்றார்; தம் மைந்தர் வருகையை எதிர் நோக்கித் தங்கியிருந்தார்.

கூட்டத்தில் ஜவாஹர் வரிகொடா இயக்கத்தை எங்ஙனம் நடத்துவது என்பது பற்றி விளக்கமாகப் பேசிக் குடியானவர்க்கு நாட்டுப் பற்றையும் உரிமை வேட்கையையும் நன்கு ஊட்டினார்; கூட்டம் முடிந்தது. ஜவாஹரும் கமலாவும் மாளிகை நோக்கி நடந்து வந்தனர். அவ்வமயம் போலீசார் அங்குத் தோன்றி ஜவாஹரைச் சிறை செய்து அழைத்துச் சென்றனர். கமலா மட்டும் மாளிகைக்கு வந்தார்.

தம் மைந்தரைக் கண்டு பேச வேண்டும் என்று தம் உடல் நிலையையும் கவனியாது புகை வண்டிப் பிரயாணம் செய்து வந்து காத்திருந்த மோதிலாலைக் கமலா கண்டார்; வணங்கினார்; நடந்ததை நவின்றார். மோதிலாலுக்கு வருத்தமும் சீற்றமும் தோன்றின. "நான் இனி நோயாளியாக இருக்கப் போவதில்லை; ஆண்மையோடு போராடவேண்டும்" என்று கூச்சலிட்டார்; அன்று முதல் அவர் மருந்துகளை அருந்திக் கொண்டே அரசியல் வேலைகளைக் கவனித்து வந்தார்.

## கமலா சிறைப்படல்

கமலாவைப் போன்ற உயர்குண மங்கையர் மிகச் சிலரே தோன்றுகின்றனர். அந்த அம்மை

யார் கணவரை மணந்த நாள்முதல் காங்கிரஸ் உறுப்பினராகி, நாட்டுப் பணியிலேயே நாட்களைக் கழித்தார்; தொண்டர்க்குரிய பயிற்சி பெற்றார்; கணவர் சிறைப்பட்ட பிறகு வரி கொடா இயக்கப் பிரசாரத்தினால் தாமும் சிறைப்பட்டார். அப்பொழுது அந்த அம்மையார் நாட்டுமக்கட்கு, "நான் என் கணவரைப் பின்பற்றிச் சிறைக்கூடம் செல்கின்றேன். நீங்கள் நாட்டுப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திவருக!" என்னும் அறிக்கையை வெளியிட்டார்.

## மோதிலால் மறைவு

1931 - ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் காங்கிரஸ் தலைவர் அனைவரும் விடுதலை பெற்றனர். மோதிலால் உடல் நலம் கவலைக்கிடமாய்ப் போனதால் ஜவாஹரும் கமலாவும் விடுதலை பெற்றனர். காந்தியடிகள், சர்தார் வல்லபாய் படேல் முதலிய பெருந்தலைவர்கள் மோதிலால் மாளிகையிற்கூடினர். மோதிலால் அடிகளைப் பார்த்து, "நான் விரைவில் மறைவேன். நீங்கள் உரிமை நாட்டைக் கண்டு களிப்பீர்களாக!" என்று கூறினர்.

அவரது படுக்கையின் ஒரு பக்கத்தில் ஜவாஹரும் மற்றொரு பக்கத்தில் சொரூப ராணியும் தூக்கமின்றி விழித்திருந்தனர். நடு இரவில் மோதிலால் அமைதியாகத் தூங்குவார் போல இருந்தார். ஆனால் அவர் தூக்கத்திலிருந்து எழுந்

திருக்கவே இல்லை. காந்தியடிகள் உடன் இருந்து அனைவர்க்கும் ஆறுதல் கூறினர்.

நாட்டு உரிமைக்குத் தம் வாழ்வையும் மனைவி மக்களையும் தியாகம் செய்த உத்தமர் காலமானதைக் கேட்டு இந்திய நாடே அலறியது. ஜவாஹர் மாளிகையிலிருந்து நான்கு கல் தொலைவுள்ள சுடுகாடுவரை லக்ஷக் கணக்கான மக்கள் கூடிவிட்டனர். காங்கிரஸ் தலைவர்கள், அரசியல்வாதிகள், பெரிய அரசியல் அலுவலாளர் முதலியோர் பல வெளி ஊர்களிலிருந்து வந்து சேர்ந்தனர்; காலமான தியாக வீரர்க்கு வந்திருந்த அனைவரும் தமது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டனர். வைசிராய் இர்வின் பிரபு, மாகாணக் கவர்னர்கள் முதலியோர் ஜவாஹருக்குத் தம் வருத்தத்தைத் தந்திகள் மூலம் தெரிவித்துக்கொண்டனர். சுடுகாட்டில் காந்தியடிகள், மதன் மோஹன மாளவியா முதலிய பெரியோர் மோதிலாலின் தியாகத்தைப் பற்றி உருக்கமாகப் பேசினர்.

காந்தியடிகள் ஜவாஹருக்கும் மற்றவர்க்கும் ஆறுதல் கூறிச் சிலநாள் அவர்களுடன் இருந்தார்.

## 7. நாட்டுத் திருப்பணி - II

### வட்டமேசை மாநாடு

இந்தியாவுக்கு எத்தகைய அரசியலை வழங்குவது என்பதை முடிவு செய்ய 1930 - ல் இங்கி

லாந்தில் வட்டமேசை மாநாடு ஒன்று நடைபெற்றது. அதனிற் காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை. பிற சிறிய கட்சிக்காரர்கள் இங்கிலாந்து சென்று, ஒரு முடிவுக்கும் வராது 1931 - ல் மீண்டனர். காங்கிரஸ் ஒத்துழைப்பு இல்லாமல் வட்டமேசை மாநாடு வெற்றி பெறாது என்று எண்ணிய இந்திய அரசாங்கம் காந்தியடிகளிடம் நட்புப் பாராட்டத் தொடங்கியது. அதன் பயனாகக் காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி, ஓர் ஆள் தலைச் சுமை உப்பை வரியின்றி அள்ளிக் கொள்ள உரிமை கிடைத்தது; துணிக் கடைகளிலும் கள்ளுக்கடைகளிலும் அமைதியாக மறியல் செய்யத் தொண்டர்க்கு உரிமை கிடைத்தது; அரசியல் தொண்டரும் தலைவரும் விடுதலை பெற்றனர். காங்கிரஸ் இரண்டாம் வட்டமேசை மாநாட்டுக்குச் செல்ல இசைந்தது.

## கராச்சியில் காங்கிரஸ் பேரவை

1931- ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் கராச்சியில் காங்கிரஸ் பேரவை கூடியது. அதற்குச் சர்தார் படேல் தலைமை தாங்கினர். அதற்கு முன்னரே காந்தியடிகள் ஜவாஹரைத் தனியே சந்தித்தார்; தாம் வைசிராயுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை விளக்கி, நாட்டு முழு உரிமைக் கொள்கைக்கு அது தீமை விளைக்காது என்பதை வற்புறுத்தினர். அடிகளிடம் முழு நம்பிக்கை

கொண்ட ஜவாஹர் மன அமைதி பெற்றார்; காந்தி-இர்வின் ஒப்பந்தத்தைக் காங்கிரஸ் பேரவையில் அரங்கேற்றம் செய்தார்.

## இரண்டாம் வட்டமேசை மாநாடு

காந்தி - இர்வின் ஒப்பந்தப்படி காங்கிரஸ் இரண்டாம் வட்டமேசை மாநாட்டிற் கலந்து கொள்ள இசைந்தது. அதன் முடிவுப்படி அடிகளே இலண்டன் செல்லத் தயாரானர். அச் சமயத்தில் எல்லைப்புற மாகாணம், ஐக்கியமாகாணம் வங்காளம் இவற்றில் குடியானவர் கிளர்ச்சி வலுத்தது. நிலைமைக்கு ஏற்றவாறு நடந்துகொள்ளும்படி தலைவர்க்கு யோசனை கூறி, அடிகள், இலண்டனுக்குப் புறப்பட்டார். அவர் 1931 - ஆகஸ்டில் சென்றார்; இந்தியத் தலைவர்கள் அனைவரும் சுய ஆட்சி பற்றி ஒரு திட்டமான முடிவுக்கு வராமையால் அதே ஆண்டு டிஸம்பரில் இந்தியா மீண்டார்.

## வைசிராய் வெல்லிங்டன் பிரபு

இர்வின் பிரபுவுக்குப் பிறகு வைசியாராக வந்தவர் வெல்லிங்டன் பிரபு. அவரே அடிகளை இலண்டன் போகுமாறு வற்புறுத்தியவர். அடிகள் வருவதற்குள் பல அவசரச் சட்டங்களைப் பிறப்பித்து, முன் சொன்ன மூன்று மாகாணங்களிலும் பலரைச் சிறைப்படுத்தினர்; ஜவாஹரும் சிறைப்பட்டார். இந்தியாவுக்குத் திரும்பிவந்த அடிகள்

நிலைமையை நன்கு அறிந்தார்; 'நெருக்கடியான நிலையை நாட்டில் உண்டாக்கலாகாது. அவசரச் சட்டங்களை அகற்றுதல் நல்லது' என்று வைசிராய்க்குக் கடிதம் வரைந்தார். அவரது யோசனை கவனிக்கப்படவில்லை. அடிகளே 1932 ஜனவரியில் சிறைப்பட்டார். அவ்வளவே: நாடெங்கும் தீவிர மான சத்தியாக்கிரகப் போர் தொடங்கியது; கொடிய அடக்கு முறையும் தோன்றியது.

## சொரூப ராணியார் அடிபடல்

இலாஹபாத்தில் காங்கிரஸ் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. சொரூப ராணியார் தலைமை தாங்கிச் சென்றார்; ஓர் இடத்தில் ஊர்வலம் நின்றது. அம்மையார் அதன் எதிரில் நாற்காலி ஒன்றில் அமர்ந்தார். அவ்வளவே: உடனே போலீசார் கூட்டத்தைக் கலைத்தனர்; தடிகளைத் தாராளமாகப் பயன்படுத்தினர்; சொரூப ராணி யாரை நாற்காலியிலிருந்து கீழே தள்ளினர். அவர் தலைமீது பிரம்படிகள் பட்டுக்கொண்டே இருந்தன. சுற்றி இருந்த மக்கள் அனைவரும் விரட்டப்பட் டனர். பின்னர் அம்மையாரை மோட்டாரில் ஏற்றிச் சென்று போலீசார் அவரது மாளிகையில் விட்டுச் சென்றனர். தளர்ந்த வயதில் அம்மையார் பட்ட துன்பத்தைப் பாருங்கள்! சிறைக்குள் இருந்த ஜவாஹர் இந்த நிகழ்ச்சியைக் கேள்வியுற்று மனம் வருந்தினர்.

## அடிகள் உண்ணுவிரதம்

ஜவாஹர் சிறையில் இருந்தபொழுது, பிரிட்டிஷ் அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களை இந்து சமயத்திலிருந்து வேறு பிரித்தது. அடிகள் அதனை எதிர்த்து, 'அரசாங்கத் தீர்ப்பு மாறும்வரை அல்லது நான் இறக்கும்வரை உண்ணுவிரதம் மேற்கொள்வேன்' என்று அறிக்கை வெளியிட்டு உண்ணுவிரத நோன்பை மேற்கொண்டார். இதனை அறிந்த ஜவாஹர் பெருங்கவலை கொண்டார். 'அடிகள் இறப்பின் உரிமைப் போராட்டம் என்ன ஆகும்?' என்று தமக்குள் கேள்வி கேட்டுப் பதில் காணுது துன்புற்முர். ஆயினும், 'அடிகள் இறவார்; வெற்றி பெறுவார்' என்ற எண்ணம் மெல்ல மெல்ல அவருக்கு உண்டானது.

அடிகள் விரும்பியபடி தீர்ப்பு மாறியது. அடிகள் உண்ணுவிரதத்தைக் கைவிட்டார். இச் செய்தியைக் கேள்வியுற்ற ஜவாஹர், "இவர் ஒரு வியத்தகு மனிதர்; எல்லோரையும் தம் வயப்படுத்தும் மன ஆற்றல் படைத்தவர்; மிகவும் சிக்கலான பெரிய காரியத்தை உண்ணு நோன்பு கொண்டு தீர்த்து விட்டார். இவர் இருக்கும் வரை இந்தியாவிற்குக் குறை நேராது" என்று தமக்குள் எண்ணி மகிழ்ந்தார்.

## விடுதலையும் சிறையும்

ஜவாஹர் 1933-ஆம் ஆண்டு செப்டெம்பரில்

விடுதலை பெற்றார்; நோயுற்றிருந்த தம் ஆருயிர் அன்னையாரை மருத்துவ நிலையத்திற் கண்டார்; பின்னர்க் காங்கிரஸ் செயற்குழு உறுப்பினரைக் கண்டு இயக்கத் தொடர்பான வேலைகளைப் பற்றிப் பேசினார்; கல்கத்தாவுக்குச் சென்று சொற்பொழி வாற்றி மீண்டார். அப்பொழுது பீஹாரில் கடுமை யான நில நடுக்கம் உண்டாகி மக்கட்குப் பெருந் துன்பங்களை விளைத்தது. ஜவாஹர் பீஹார் மாகாணத்துக்கு விரைந்தார்; பல நாள் சுற்றுப் பிரயாணம் செய்து, நில நடுக்கத்தால் துன்புற்ற மக்கட்கு வேண்டிய வசதிகளைச் செய்வித்தார்; இங்ஙனம் ஏறத்தாழ ஆறு திங்கள் சிறைக்கு வெளியில் இருந்தார்.

1934-ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஒரு நாள் மாலை ஜவாஹர் தமது மனைவியாருடன் பேசிக் கொண்டு மாளிகை வெளியில் உலவிக்கொண்டிருந் தார். அப்பொழுது ஒரு மோட்டார் அவர்கள் மாளிகைக்கு முன்வந்து நின்றது. உள்ளிருந்து போலீஸ் அதிகாரி ஒருவர் இறங்கினார். உடனே ஜவாஹர் புன் சிரிப்புடன், "பல நாட்களாக உங்களை எதிர்நோக்கி இருந்தேன்" என்றார்; மறு நிமிடமே வந்த மோட்டாரில் ஏறிக்கொண்டு சிறைக்கூடம் சென்றார். ஜவாஹர் கல்கத்தாவிற் செய்த சொற்பொழிவு தவறுடையது என்று அரசாங்கம் தீர்மானித்து, அவரைச் சிறை செய்தது; இரண்டு வருடக் காவல் தண்டனை விதித்தது.

## கமலா நோயுறல்

கமலாவின் உடல் நிலை நாளுக்கு நாள் தளர்ந்தது. அவர் நோயுற்றுப் படுக்கையிற் கிடந்தார். ஜவாஹர் அவரை அடிக்கடி வந்து பார்க்க அரசாங்கத்தார் அநுமதி அளித்தனர்; 'இனி அரசியலிற் கலந்துகொள்ளாதிருப்பின் இன்றே விடுதலை பெறலாம்' என்று அரசாங்கத்தார் அறிஞர் சிலரை விட்டு ஜவாஹருக்கு யோசனை கூறச் செய்தனர். ஆயின், அத் தியாக வீரர், "நாட்டுப் போராட்டத்தில் படைத்த நிதி இழந்தேன்; எந்தையை இழந்தேன்; மனைவியை இழப்பினும் சரி; மனவுறுதியை இழவேன்" என்று உறுதியாக உரைத்தார்.

## அம்மையார் அறிவுரை

தம் கணவர் அரசியலைத் தம் பொருட்டு விட்டு விடுவதாக எண்ணியுள்ளார் என்ற தவறான செய்தி கமலாவுக்கு எட்டியது. அவரைப் பார்க்க ஜவாஹர் ஒரு நாள் சென்றார். அப்பொழுது அந்த அம்மையார் கடுங்காய்ச்சலால் துன்புற்றார். அவர் அந்த நிலையில் தம் கணவர் கைகளைப் பற்றிக்கொண்டு தாம் கேள்வியுற்ற வதந்தியைக் குறிப்பிட்டு, "அரசியலை விடுவதாக அரசாங்கத்திற்கு வாக்களிக்க வேண்டா" என்று கூறினர். ஆ! கணவர் இன்றித் தாம் நோய்வாய்ப்பட்டுத் துன்புற்ற அத்

தனி நிலையிலும் அவர் கொண்டிருந்த நாட்டுப் பற்றை என்னென்பது!

## ஐரோப்பிய யாத்திரை

கமலா உடல் நிலை கவலைக்கிடமாயிற்று. அவரை ஜெர்மனி நாட்டுக்கு அழைத்துச் செல்லுமாறு யோசனை கூறப்பட்டது. அவருக்கு விடை கொடுத்தனுப்ப ஜவாஹர் சிறையிலிருந்து விடப் பட்டார். ஜவாஹர், பாவம்! கண்ணீருடன் அவருக்கு விடை தந்து அனுப்பினர். அம்மையார் 1935-ஆம் ஆண்டு மே மாதம் ஜெர்மனியை அடைந்தார். நான்கு திங்களுக்குப் பிறகு அவரது உடல் நிலை சீர் கெட்டது. அதனை அறிந்த அரசாங்கம் ஜவாஹரை விடுதலை செய்துவிட்டது. அவர் உடனே வான ஊர்தியிற் சென்று மனைவி யாரை அடைந்தார்.

கணவரைக் கண்ட கமலாவின் வாடிய முகம் கதிரவனைக் கண்ட தாமரையென மலர்ந்தது. அவர் புன்முறுவலுடன் கணவரை வரவேற்றார்; கணவர் வந்து சேர்ந்த மகிழ்ச்சியால் குணமுற்றவராகவும் காணப்பட்டார்; ஆயின் சில நாட்களுக்குப் பின் நோய் மிகுதிப்பட்டது. ஜவாஹர் அவர் படுக்கையின் பக்கத்திலேயே இருந்துவந்தார்; சில நூல்களைப் படிப்பார்; அம்மையார் கண்களை மூடிக் கேட்டுக்கொண்டே இருப்பார்; சில சமயங் களில் மெல்லிய குரலில் கணவருடன் பேசுவார்;

1936-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் சுவிட்ஸ லாந்தில் உள்ள ஓர் ஊருக்கு இடம் மாறினர்; ஆயினும் அங்கும் அவரது உடல்நிலை வளர்ச்சி பெறவில்லை.

1936-ஆம் ஆண்டு ஏப்ரலில் இலக்ஷ்மணபுரியில் காங்கிரஸ் பேரவை கூட இருந்தது. அதற்கு ஜவாஹர் தலைவராக தேர்ந்தெடுக்கப் பெற்ருர். அவர் தம் மனைவியாருடன் இருப்பதா? கவலைக் கிடமான நிலையில் உள்ள அவரை விட்டு இந்தியா செல்வதா?—என்ன செய்வதென்பது தோன்ற வில்லை. அவர் இருதலைக்கொள்ளி எறும்பு போல் ஆனர். காங்கிரஸ் தலைவர் பதவியை விடலாகாது என்பது கமலாவின் கருத்து. மனைவியாரது வற் புறுத்தலுக்கு இணங்கி ஜவாஹர் இந்தியாவுக்குச் செல்லத் துணிந்தார்; ஆனல் மருத்துவ நிபுணர் வேண்டுகோள்படி பத்து நாள் கழித்துச் செல்ல உடன்பட்டார். அப்பொழுது அவர் மகளான இந்திரா நெஹ்ரு பக்கத்து ஊரில் இருந்த பள்ளி ஒன்றிற் படித்து வந்தார்.

## கமலா மறைவு

மருத்துவர் வேண்டுகோள்படி ஜவாஹர் தம் மனைவியாருடன் இருந்தது நல்லதாயிற்று. அந்த அம்மையார் திடீரென்று 1936-ஆம் ஆண்டுப் பிப்பரவரித் திங்கள் 28-ஆந் தேதி அன்று கால மானர். ஜவாஹர் அவர் உடலைச் சுடுகாட்டில்

எரித்து எஞ்சிய அஸ்தியை ஒரு சிறு கலசத்தில் அடக்கினர்; தாம் இந்தியா மீண்டவுடன் அதனைக் கங்கையாற்றில் விட்டார். அவரது உயிருக்குயி ரான கமலா அம்மையார் உலக வாழ்க்கை இங்ஙனம் முடிந்தது.

## முசோலினியைக் காண மறுப்பு

அப்பொழுது இத்தாலி நாட்டுச் சர்வாதிகாரி யான முசோலினி ஜவாஹரை சந்தித்துப் பேச விரும்பினர்; கமலாவின் பிரிவிற்கு தமது வருத் தத்தைத் தெரிவித்தார். முசோலினி அபிசீனிய நாட்டு உரிமையை அழித்தவர்; தம் மனப் போக்கின் படி நாடாண்டவர். ஆதலின் ஜவாஹர் அவரை வெறுத்தார். எனவே, அவரைக் காண அவர் விரும்பிலர்; தமக்குள்ள மனத்துயருடன் அவரைக் காண விருப்பமில்லை என்பதை நயமாகத் தெரிவித்தார். முசோலினி அவரைச் சந்தித்துப் பேசப் பலவாறு முயன்றார்; ஆனல் அம்முயற்சி பயன்படவில்லை.

## ஜவாஹர்-காங்கிரஸ் தலைவர்

1936-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இலக்ஷ்மண புரியில் காங்கிரஸ் பேரவை கூடியது. ஜவாஹர் அதற்குத் தலைமை தாங்கினர்; அரசாங்கத்தினரால் அளிக்கப்பட்ட மாகாணச் சுய ஆட்சித் திட்டத்தை நடத்தி வைக்கக் காங்கிரஸ்

காரர் பதவி ஏற்கவேண்டும் என்ற தீர்மானம் பேரவையில் நிறைவேறியது. இது ஜவாஹருக்கு உடன்பாடன்று; எனினும் பெரும்பாலோர் விருப்பப்படி விட்டனர்.

நாடெங்கும் காங்கிரஸ்காரர் தேர்தல் பிரசாரம் நிகழ்த்தினர். தலைவரான ஜவாஹர் எல்லா மாகாணங்களையும் சுற்றி வந்தார். தந்நலமற்ற அப்பெரியாரது சுற்றுப் பிரயாணம் மிக்க பலனை அளித்தது. 1937-ஆம் ஆண்டுப் பிப்ரவரித் திங்களில் நடந்த தேர்தல்களில் காங்கிரஸ்காரர் பெரு வெற்றி பெற்றனர்; ஆறு மாகாணங்களில் அமைச்சர் பதவிகளை ஏற்று ஆட்சி புரியலாயினர்.* மற்ற மாகாணங்களில் முஸ்லிம் லீகர் பதவி ஏற்றனர். ஐக்கிய மாகாண அமைச்சர் குழுவில் ஜவாஹர் தங்கையாரான விஜயலக்ஷ்மி அம்மையார் கல்வி அமைச்சர் ஆனார். ஜவாஹர் 1937-லும் (மூன்றும் முறையாகக்) காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## அன்னையார் பிரிவு

ஐரோப்பாவில் கமலா இறந்ததைக் கேட்டது முதல் அன்னை - சொரூபராணியார் உடல் நிலை கெட்டது. கணவர் இறப்பு - மகன், மகள், மரு

* அக் காலத்தில் நமது சென்னை மாகாணத்தில் கனம். ஸி. இராஜகோபாலாசாரியார் அவர்கள் தலைமையில் அமைச்சர் குழு அமைந்தது.

மகன், மருமகள் இவர்கள் அடுத்தடுத்துச் சிறை வாழ்க்கை நடத்தியது - தாம் போலீசாரால் தாக்குண்டது - வீட்டில் தம் மக்கள் இன்றித் தாம் தனி வாழ்க்கை நடத்தியது - இறுதியில் கமலாவின் வருந்தத் தக்க இறப்பு - இவை அனைத்தும் நாளடைவில் அவர் உயிரை உண்டு வந்தன. 1938-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அவர் உடல்நிலை கவலைக்கிடமாயிற்று. அப்பொழுது அவரைப் பார்த்துச் செல்ல விஜயலக்ஷ்மி, கிருஷ்ணு முதலியோர் வந்திருந்தனர். அவர் ஒரு நாள் மலர்ந்த முகத்துடன் தம் மைந்தருடனும் பெண்களுடனும் இரவு நெடுநேரம்வரை பேசிக்கொண்டிருந்தார்; பிறகு ஊருக்குப் புறப்பட்ட விஜயலக்ஷ்மியைத் தழுவி விடை கொடுக்க எழுந்தார்; நிற்க முடியாது சாய்ந்தார். ஜவாஹர் அவரைத் தாங்கிப் படுக்க வைத்தார். சிறிது நேரத்தில் அவரது உயிர் பிரிந்தது. ஜவாஹர் விழி நீர் வார, "நமது அன்னையாரும் நம்மை விட்டு அகன்றனர்" என்றனர்.

சொரூபராணியார் ஏழை மக்கட்குத் தாய் போன்றவர். இலாஹபாத் ஏழை மக்கள் அவர் இறப்பைக் கேட்டுத் திடுக்கிட்டுப் பல்லாயிரக் கணக்கில் கூடிவிட்டனர். நகரப் பெருமக்கள், காங்கிரஸ் தலைவர்கள் எல்லோரும் கூடினர்; பெருந் தலைவரான - இந்தியத் தாயின் தவப்புதல்வ

ரான ஜவாஹரை ஈன்ற அந்த அம்மையாருக்குத் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

## பெரிய தாயார் பிரிவு

சொரூபராணியார் இறந்தது பீபி அம்மையாருக்குப் பேரிடி விழுந்ததுபோல் ஆயிற்று. அவர் தம் தங்கையார் உடல் எடுத்துச் செல்லப்பட்ட பிறகு, அந்த உடல் கிடத்தப்பட்ட இடத்தின் மீது படுத்தார்; கிருஷ்ணாவைத் தழுவிக் கண்ணீர் விட்டார்; "என் உயிரான தங்கை - சொரூபராணி சென்ற பிறகு உடலாகிய எனக்கு இங்கு என்ன வேலை!" என்று கூறிக் கண்களை மூடினார்; நள்ளிரவில் அவரது ஆவி உடலை விட்டு அகன்றது. பாவம்! ஜவாஹருக்குத் துயரத்தின்மேல் துயரம் உண்டாயிற்று. மறுநாள் பீபி அம்மாள் இறப்பினை அறிந்த நகர மக்கள் அக்கை - தங்கையர்க்கு இருந்த உயிர் நட்பை எண்ணி வியந்தனர்; நெஹ்ருவின் குடும்பத் துன்ப நிலையை எண்ணி மனம் வருந்தினர்; அக்குடும்பத்தாரது தியாகத்தை வியந்து பாராட்டினர்.

## ஐரோப்பிய யாத்திரை

1938-ஆம் ஆண்டில் ஜவாஹர் தமது காங்கிரஸ் தலைவர் பதவியை சுபாஷ் சந்திர போஸ் அவர்களிடம் ஒப்புவித்தார்; மன அமைதியை விரும்பிக் காந்தியடிகளிடம் விடைபெற்று

ஐரோப்பாவுக்குச் சென்றார்; ஸ்பெயின் நாட்டில் நடந்துவந்த போரைக் கவனித்தார்; இத்தாலி, ஜெர்மனி ஒழிந்த பிற நாடுகட்குச் சென்றார்; எல்லா நாடுகளிலும் இருந்த போர் பற்றிய அச்சத்தை உணர்ந்தார்; விரைவில் இரண்டாம் உலகப் போர் நடைபெறலாம் என்று எண்ணினர். அப்பொழுது ஜெர்மனியில் ஹிட்லர் சர்வாதிகாரியாக இருந்து போர்க்குரிய திட்டங்களைத் தயாரித்து வந்தார். அவர் கட்சியைச் சேர்ந்த தலைவர் சிலர் ஜவாஹரை ஜெர்மனிக்கு அழைத்தனர். சர்வாதிகாரிகளை ஜவாஹர் வெறுப்பவர் ஆதலின் அவர் ஜெர்மனிக்குச் செல்ல மறுத்துவிட்டார்; பின்னர் நவம்பர் மாதம் இந்தியா மீண்டார்.

## சீனச் செலவு

ஜவாஹர் 1939-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் சீன நாட்டுக்குச் சென்றார். அப்பொழுது சீன - ஜப்பான் போர் நடந்து வந்தது. சீனக் குடியரசுத் தலைவரான சியாங் - கேய் - ஷேய்க் ஜவாஹரை வரவேற்று உபசரித்தார்; ஜப்பான் குண்டுமாரியையும் சீன மக்களது தாய் நாட்டுப் பற்றையும் நேரிற் கண்ட ஜவாஹர் சீனர்மீது அன்பும் இரக்கமும் கொண்டார்; "உரிமை பெறுவது ஒன்று; பெற்ற பின்னர் அதனைக் காப்பது மற்றொன்று" என்று தமக்குள் எண்ணிப் பெருமூச்சு விட்டார்; பல நாள்

சீனத்தைச் சுற்றிப் பார்த்த பின்னர் இந்தியாவை அடைந்தார்.

## இரண்டாம் உலகப்போர் - இந்திய நிலைமை

ஐரோப்பாவில் 1939-ஆம் ஆண்டுச் செப்டெம்பர் மாதம் இரண்டாம் உலகப்போர் தோன்றியது. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவைப் போரில் இழுத்துவிட்டது. காங்கிரஸ் அமைச்சர் அவைகள் கலைந்துவிட்டன. 1940-ஏப்ரலில் கூடிய காங்கிரஸ் பேரவையில் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தலைவராக இருந்து, 'காங்கிரஸ் போரில் கலக்க முடியாது; முழு உரிமையே காங்கிரஸ் குறிக்கோள்', என்ற இரு தீர்மானங்களை நிறைவேற்றினர். பேரவைக்குப்பிறகு, முன்னர்க் கோரக்பூரில் செய்த மூன்று சொற்பொழிவுகட்கு என்று, அரசாங்கத்தார் ஜவாஹரைச் சிறைப்படுத்தி நான்கு வருடக் காவல் தண்டனை அளித்தனர்; ஆயின், 1941-ஆம் ஆண்டு இறுதியில் அவரையும் பிறரையும் விடுதலை செய்தனர்.

## மீண்டும் சிறை வாழ்க்கை

1942-ஆம் ஆண்டு ஆகஸ்டில் காங்கிரஸ் செயற்குழு கூடி, 'ஆங்கில ஆட்சி உடனே அகல வேண்டும்' என்று தீர்மானித்தது. ஆங்கில அரசாங்கம் இந்தியாவைவிட்டுப் போக மறுப்பின், அமைதியான முறையில் உரிமைப்போர் நடத்துவது

என்பது அக் குழுவினர் செய்த தீர்மானமாகும். ஆங்கில அரசாங்கம் இருக்கும்வரை இந்து-முஸ்லிம் ஒற்றுமை உண்டாகாது என்பது அவர்கள் எண்ணம்.

மேற்சொன்ன தீர்மானம் நிறைவேற்றிய மறு நாள் காந்தியடிகள், ஜவாஹர் முதலிய எல்லாத் தலைவர்களும் சிறை செய்யப்பட்டனர்; ஜவாஹர் அஹ்மத்நகரக் கோட்டையில் சிறைவைக்கப் பட்டார். நாட்டில் பொது மக்கள் கிளர்ச்சியும் அரசாங்க அடக்குமுறைகளும் தாண்டவமாடின.

## விடுதலையும் வரவேற்பும்

1945-ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஜவாஹர் விடுதலையானார். அவரை வரவேற்க இலாஹபாத் நகரமக்கள் அந்நகரத்தை நன்கு அலங்கரித்தனர்; புகைவண்டி நிலையத்திலிருந்து சுயராஜ்ய பவனம் வரை சாலைநெடுக மக்கள் ஆயிரக் கணக்கில் கூடி நின்றனர். நாட்டு உரிமைப் போராட்டத்தில் தந்தையார் - மனைவியார் - தாயார் இவர்களைத் தியாகம் செய்து தம்மையும் அர்ப்பணம் செய்த பெருந்தகையாளரைக் காணப் பொதுமக்கள் ஆவலாக இருந்தனர். குறித்த நேரத்தில் வண்டி வந்து நின்றது. 'ஜவாஹர் வாழ்க!' என்ற ஓசை வானைப் பிளந்தது. வண்டியிலிருந்து வெளிவந்த ஜவாஹர் பொது மக்கட்குத் தம் வணக்கத்தைச் செலுத்தினார். அவரது மோட்டார் மிக்க அமைதி

யாகப் பெரிய ஊர்வலத்திற்கிடையே சென்றது. அன்று பொதுமக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. இரவு பன்னிரண்டுவரை அவர்கள் ஜவாஹரை வாழ்த்தியவண்ணம் இருந்தனர்.

## கமலா மருத்துவக்கூடம்

இலாஹபாத்தில் கமலா நேஹ்ருவின் நினைவுக்கு அறிகுறியாக, அவர் பெயரால் மருத்துவக் கூடம் ஒன்று ஏற்பட்டிருந்தது. விடுதலை அடைந்து மீண்ட ஜவாஹர் அதனைச் சென்று பார்வையிட்டார்; பின்னர்ப் பம்பாயிற் கூடிய காங்கிரஸ் செயற்குழுவினர் கூட்டத்துக்குச் சென்றார்.

## பம்பாயில் வரவேற்பு

ஜவாஹர் பம்பாயில் வண்டியை விட்டு இறங்கியதும் கணக்கற்ற மாலைகள் அவர் கழுத்தில் விழுந்தன; ஏறக்குறைய ஒரு லக்ஷம் மக்கள் அவரைக் காணக் கூடியிருந்தனர். அவர்களது அன்பின் பெருக்கைக் கண்ட ஜவாஹர் கண்களில் நீர் துளிக்கக் கைகளைக் கூப்பி வணங்கினர். மக்கள் மகிழ்ச்சி பொங்க, 'இந்திய முடிசூடா மன்னர் வாழ்க' இந்தியத் தாயின் இணையிலாப் புதல்வர் வாழ்க!' என்று வாழ்த்தினர்.

# 8. இந்தியா உரிமை பெற்றது

## அரசாங்கத்தார் முயற்சி

இந்து - முஸ்லிம் கட்சிகட்கு இடையே ஒற்றுமையை உண்டாக்கி இந்தியாவுக்கு உரிமை வழங்க அரசாங்கத்தார் முயன்றனர்; பிரிட்டிஷ் அமைச்சர் சிலர் இந்தியா வந்து முயன்றனர். இந்திய வைசிராயாக இருந்த வேவல் பிரபுவும் தம்மால் இயன்றவரை முயன்றார். ஒரு பலனும் ஏற்படவில்லை. முஸ்லிம் லீகின் தலைவரான ஜனப் ஜின்னஹ் அவர்கள் இந்தியாவை இரண்டாகப் பிரித்தே தீரவேண்டும் என்று பிடிவாதம் செய்தார். அதனல் அரசியல் உலகம் குழம்பிக் கிடந்தது.

## ஜவாஹர் திருப்பணி

இதற்கிடையில் ஜவாஹர் காங்கிரஸ் தலைவராக (நான்காம் முறை)த் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசியல் குழப்பத்தில் அவரது பொறுப்பு மிகுதியாயிற்று. அச்சமயத்தில் பரித்கோட் சம்ஸ்தானத்தில் அதிகாரிகள் கொடுமைகள் மிகுதிப்பட்டன. ஜவஹர் அங்குச் சென்றார்; சிறிதுநேரம் மன்னரைக் கண்டு பேசினர். அப்பேச்சின் விளைவாக எல்லாத் தடை ஆணைகளும் நீக்கப்பட்டன. ஜவாஹர் கூறிய யோசனைப்படி தாம் நடப்பதாக மன்னர் வாக்களித்தார். ஜவாஹரது வரவினல் உண்டான வியத்தகு மாறுதலைக் கண்ட

சம்ஸ்தான மக்கள் அப்பெரியாரை மனமார வாழ்த்தினர்.

## அரசியல் அமைப்பு அவை

இந்தப் பேரவை எல்லா உரிமைகளையும் உடையது. பிரிட்டிஷார் இதனைக் கட்டுப்படுத்த இயலாது. இந்தியாவுக்கு உரிய சட்ட திட்டங்களையும் பாதுகாப்பு முறைகளையும் பிறவற்றையும் அமைத்துக்கொள்ள இதற்கு முழு உரிமையும் உண்டு. இந்தப் பேரவை 1946-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ஆந் தேதி புதிய டெல்ஹியிற் கூடியது. பாபு இராஜேந்திரப் பிரசாத் அவைத்தலைவரானர். அப்பொழுது நமது ஜவாஹர் எழுந்து அவையின் வேலைகளைத் திறம்பட விளக்கிப் பேசினர்.

## இடைக்கால அமைச்சர்கள்

அரசியல் திட்டம் உருவாகும் வரை காங்கிரஸ்காரரும் முஸ்லிம் லீகரும் சேர்ந்த கூட்டு அமைச்சர் அவை அமைத்து இந்திய அரசாங்கத்தை நடத்தி வருமாறு வைசிராய் வற்புறுத்தினர். அதற்குக் காங்கிரஸ் தலைவர்கள் இசைந்தனர்; லீகர் இசையவில்லை. முடிவில் காங்கிரஸ் தலைவர்கள் அமைச்சர்களாயினர். அரசாங்கம் ஒழுங்காக நடைபெறலாயிற்று. பின்னர் லீகரும் வந்து அமைச்சர்களாயினர்.

## இந்தியா உரிமை பெற்றது

1947-ல் வீகர் வற்புறுத்தலின்மீது இந்தியா (1) பாகிஸ்தான் என்றும், (2) இந்திய நாடு என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. முஸ்லிம்கள் பலராக இருக்கும் பலுசிஸ்தானம், கிழக்கு வங்காளம், மேற்குப் பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து ஆகிய மாகாணங்கள் 'பாகிஸ்தான்' அரசாங்கத்திற்கு உட்பட்டன. கிழக்குப் பஞ்சாப், ஐக்கிய மாகாணம், பீஹார், மேற்கு வங்காளம், அஸ்ஸாம், நடு மாகாணம், ஒரிஸ்ஸா, பம்பாய், சென்னை மாகாணங்கள் 'இந்திய நாட்டு' அரசாங்கத்திற்கு உட்பட்டன. சம்ஸ்தானங்கள் தம் குடிகள் விருப்பப்படி பாகிஸ்தானையோ இந்திய நாட்டையோ காப்பாகக் கொண்டு வாழலாம் என்பது முடிவாயிற்று. பாகிஸ்தானுக்குக் கராச்சி தலைநகரமாயிற்று; இந்திய நாட்டுக்குப் புதிய டெல்ஹியே கோநகரம் ஆயிற்று.

இங்ஙனம் ஓர் ஒழுங்குக்கு இருதிறத்தாரும் கட்டுப்பட்டதைக் கண்ட பிரிட்டிஷார் மகிழ்ந்து 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15-ஆந் தேதி இந்தியாவுக்கு உரிமை வழங்கினர். உரிமை பெற்ற இந்தியாவைக் காண மோதிலால் இல்லை; கமலா இல்லை; சொரூப ராணியார் இல்லை; ஆனல் அவர்கள் ஆன்மாக்கள் இந்தியா விடுதலை பெற்றதைக் கேட்க அல்லது காண அமைதிபெறும். பாகிஸ்தான் நாட்டுக்கு ஜனப் முஹம்மதலி ஜின்னஹ் அவர்கள் கவர்னர் ஜெனரல் ஆனர்.

இந்திய நாட்டுக்கு மவுண்ட் பாட்டன் பிரபுவையே (முன்போலவே) கவர்னர் ஜெனரலாக இருக்குமாறு காங்கிரஸ் தலைவர்கள் வேண்டினர். இப்பொழுது அவரே கவர்னர் ஜெனரலாக இருந்து வருகிறார். அவர் வேவல் பிரபுவுக்குப் பின் கவர்னர் ஜெனரலாக வந்தவர்; இந்திய உரிமைக்கு உண்மையாகப் பாடுபட்டவர். அவரிடம் ஜவாஹருக்கும் அடிகட்கும் மிகுந்த நம்பிக்கை உண்டு. உரிமைபெற்ற இந்திய நாட்டுக்கு நமது ஜவாஹரே முதல் அமைச்சர் ஆனார்.

## உரிமை நாள் விழா

ஆகஸ்ட் மாதம் 14-ஆம் நாள் இரவு இந்திய மக்கள் உறங்கவில்லை; தங்கள் தாய்நாடு உரிமை பெற்றது—ஜவாஹர் உரிமைபெற்ற இந்தியாவில் முதல் அமைச்சர் பதவி ஏற்று நாட்டு மக்கட்கு நல்லுரை வழங்கப் போவதைக் கேட்கவேண்டும் என்ற ஆர்வத்தினால் அந்த இரவினைச் சிவராத்திரியாகக் கழித்தனர். புதிய டெல்ஹியில் அன்றிரவு நடைபெற்ற மேளக்கச்சேரி, இன்னிசைப் பாடல்கள், உரிமை அறிவிப்பு-அமைச்சர்கள் பதவி ஏற்பு-ஜவாஹரது உருக்கமான பேச்சு முதலியன முழு இந்திய வானொலி வாயிலாக எல்லோரும் கேட்டு இன்புற்றனர்.

"என் தாய்நாட்டு மக்கட்கு வணக்கம். நாம் பல ஆண்டுகளாக விரும்பிய உரிமை பெருந்தியாகத்துக்கிடையே கிடைக்கப் பெற்றோம். நமக்கு

நல்வழி காட்டிய இறைவர்க்கு நமது வணக்கம் உரியதாகுக! அரும்பாடுபட்டுப் பெற்ற இந்த உரிமையைக் காப்பதில் நாம் கருத்து ஒருமித்துப் பணியாற்றல் வேண்டும். நமக்குள் எவ்வகையான வேறுபாடும் இருத்தல் ஆகாது. வேறுபாடுகளாற்றான் இழிவுற்று அல்லற்பட்டோம்; இனியேனும் நல்லறிவு பெற்று, 'இந்தியர் அனைவரும் ஓரினத்தவர்' என்னும் உணர்ச்சி உடையராய் வாழ முயலவேண்டும். உரிமைப் போராட்டத்திற்குத் தந்தையாராகிய காந்தியடிகள் அன்பும் ஆசியும் என்றும் நமக்கு இருக்கும். பிரிட்டிஷாருடைய நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் நமக்குத் துணைபுரியும். உரிமை பெற்ற இந்த நாட்டைக் காப்பதும் மேனிலைக்குக் கொண்டு வருவதும் உங்கள் கையிற்றான் இருக்கின்றது என்பதை நினைவூட்டுகின்றேன். உரிமைப்போரில் இதுவரை ஈடுபட்டு மாண்டவர்க்கும் துன்புற்றவர்க்கும் நமது மனமார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் இந்நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்வோம். உரிமை பெற்ற நமது தாய்நாடு வாழ்க!"

என்பது நமது முடிசூடாமன்னராகிய ஜவாஹர் பேசிய உருக்கமான பேச்சின் சுருக்கமாகும்.

## 9. உரிமை விழாவிற்குப் பிறகு

### ஜவாஹர் பெருந்தன்மை

ஜவாஹர் உள்ளம் மிகத் தூய்மையானது. இந்தியா உரிமை பெற்று நன்னிலைக்கு உயர வேண்டும் என்பதொன்றே அவரது தூய உள்ளத்தில் உள்ள தூய எண்ணமாகும். அவரிடம் கட்சி வேறுபாடுகள்-சமயவேறுபாடுகள்-சாதிவேறுபாடுகள் முதலியன காணப்படா. சிறுபான்மைக் கட்சியினரும் காங்கிரஸ் இயக்கத்துக்கு மாருக இருந்த கட்சியினரும் உரிமை பெற்ற இந்தியாவில் ஒரு படித்தானவரே-அவர்களைத் தழுவிக்கொண்டு அரசாங்கம் செல்லவேண்டும்-அவருள் திறமை உடையவர்களை அரசாங்க அலுவல்களில் அமர்த்தல் வேண்டும் என்பன அவருடைய உயர் எண்ணங்கள். அதனுல் அப்புனிதர் காங்கிரஸுக்கு மாருக ஒடுக்கப்பட்டவர் தலைவராக இருந்த டாக்டர் அம்பேத்கார் என்பவரைத் தமது அமைச்சர் அவையில் சட்ட அமைச்சராக வைத்துக்கொண்டார்; தமிழ் நாட்டில் நீதிக்கட்சித் தலைவருள் ஒருவராக இருந்த ஆர். கே. ஷண்முகம் செட்டியார் என்பவரைப் பொருள் அமைச்சராக அமர்த்திக்கொண்டார்; முஸ்லிம் லீகில் சேராது காங்கிரஸ் இயக்கத்திலேயே உழைத்து வந்த அபுல்கலாம் ஆஸாத் என்னும் முஸ்லிம் பெரியாரைக் கல்வி அமைச்சராகக் கொண்டார்; தாழ்த்தப்பட்ட மற்றொருவரை மற்றோர் அமைச்



விஜயலக்ஷ்மி அம்மையார்

சராகக் கொண்டார்; ஒரு கிறிஸ்தவர், ஒரு பார சீகர், ஒரு சீக்கியர், ஓர் அம்மையார் இவர்கட்கும் அமைச்சர் பதவிகளை அளித்தார். இப்பெருந் தன்மை மிக்க செயலால் இந்திய மக்கள் அனைவரும் அவரை மனமாரப் பாராட்டலாயினர்.

## பல நாடுகட்கும் இந்தியத் தூதர்கள்

ஒருநாடு தனது சார்பில் உலக நாடுகள் எல்லா வற்றுக்கும் அரசாங்கத் தூதர்களை அனுப்பி, அங் கங்கு இருக்கச் செய்தல் முறை. அதன்படி ஜவா ஹர் எல்லா நாடுகட்கும் அரசாங்கத் தூதர்களை அனுப்பி வைத்தார். அவரது தங்கையாரான விஜயலக்ஷ்மி அம்மையார் ருஷ்ய நாட்டில் இந்தியத் தூதராக இருக்கின்றார்.

## எதிர்பாராத் துன்பநிலை

உரிமை விழாக் கொண்டாட்டம் முடிந்த ஒரு திங்களுக்குள் கிழக்குப் பஞ்சாபிலும் மேற்குப் பஞ் சாபிலும் முஸ்லிம்-முஸ்லிம் அல்லாதார் போராட்டம் திடீரெனத் தோன்றியது. அதன் விளைவாக இந்துக்களும் சீக்கியரும் முஸ்லிம்களும் பட்ட இன் னல்கள் கணக்கில் அடங்கா. மேற்குப் பஞ் சாபில் முஸ்லிம் அல்லாதார் துன்புறுத்தப்பட்ட னர். கிழக்குப் பஞ்சாபில் முஸ்லிம்கள் துன் புறுத்தப்பட்டனர். இக்குழப்ப நிலை வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் பரவியது. என்ன கொடிய நிலைமை!

இக்குழப்பம் பிற மாகாணங்களிற் பரவ விடாமற் பார்த்துக்கொள்வது முதற்கடமை; துன் புற்ற மக்கட்கு வேண்டும் உதவி புரிதல் அடுத்த கடமை. இந்திய அரசாங்க முதல் அமைச்சரான ஜவாஹர் பாகிஸ்தான் அதிகாரிகளுடன் கலந்து பேசி, மேற்குப் பஞ்சாபிலிருந்து வெளியேற விரும்பும் முஸ்லிம் அல்லாதாரை உடனே அப்புறப் படுத்த அநுமதி வேண்டினர்; அங்ஙனமே பாகிஸ் தானுக்குச் செல்ல விரும்பும் கிழக்குப் பஞ்சாப் முஸ்லிம்களை உடனே அப்புறப்படுத்த இசைந்தார். அந்த ஒப்பந்தப்படி பல லக்ஷக்கணக்கான மக்கள் கிழக்கிலும் மேற்கிலும் மாறினர். ஜவாஹர் பஞ் சாபில் பிரயாணம் செய்து நிலைமையை நன்கு அறிந்த பின்னரே இந்த ஒப்பந்தம் செய்தார்.

இவ்வாறு இடம் மாறிவந்த முஸ்லிம் அல்லாதார் பல லக்ஷக்கணக்காவர். அவர்கட்கு வேண்டிய உணவும் உடையும் இந்திய அரசாங்கம் கொடுத்து உதவியது. ஜவாஹர் மனம் குழம்பியது. உரிமை பெற்ற நாட்டை நல்ல முறையில் பாது காத்துக் கல்வி-உழவு-கைத்தொழில் முதலியவற்றிற் கருத்தைச் செலுத்தலாம் என்று எண்ணிய அவருக்கு வகுப்புக் கலவரங்கள் பேரிடியாகத் தோன்றின. அவர் இராப் பகலாகப் பல திட்டங் களைத் தயாரித்து அகதிகளைப் பாதுகாக்கத் தக்க ஏற்பாடு செய்தார். அகதிகள் குடியேறி வாழ இடங்கள் அளிக்கப்பட்டன.

இந்தக் குழப்ப காலத்தில் அவர் செய்த சொற்பொழிவுகள் உள்ளத்தை உருக்கத் தக்கவை. 'இந்தியா மேனிலையைப் பெற வேண்டுமாயின் முஸ்லிம்களும் பிறரும் ஒரு தாய் ஈன்ற மக்களைப் போல ஒன்றுபட்ட உள்ளத்தவராய் வாழவேண்டும். இரு திறத்தாரும் போரிடல் இந்திய உரிமைக்குப் பெருங் கேட்டை விளைக்கும்' என்று அறிவுரை புகன்றார்.

## ஜவாஹரும் சம்ஸ்தானங்களும்

சம்ஸ்தான மக்கள் விருப்பப்படி சம்ஸ்தான அரசர் அரசியலை நடத்த வேண்டும் என்பது ஜவாஹர் கருத்து. அவர் அதனைப் பலமுறை வற்புறுத்தியுள்ளார். குடிகள் விருப்பத்துக்கு மாறாக அரசர் எதனையும் செய்யலாகாது என்பது நியாயமே அன்றோ? 'குடிகள் பாகிஸ்தானைச் சேரவேண்டும் என்று முடிவு செய்யின் அச்சம்ஸ்தான அரசர் அங்ஙனமே நடத்தல் வேண்டும்; அவர் அதற்கு மாறாக இந்திய நாட்டுடன் சேருதல் பெருந்தவறாகும். குடிகள் தீர்ப்பே முடிவானது' என்று அப்பெரியார் இன்றளவும் கூறி வருகின்றார். இது நாகரிக அரசாங்கத்தின் சிறந்த கொள்கையாகும் அல்லவா?

## தியாக வீரர் வாழ்க!

ஜவாஹர் செல்வக் குடும்பத்திற் பிறந்தவர்; இங்கிலாந்திற் கல்வி கற்றவர்; ஆயினும் நாட்டு

விடுதலைப் போரில் ஈடுபட்டுச் செல்வத்தைத் துறந்தார்; பாரிஸ்டர் தொழிலை மறந்தார்; தம் மனத்திற்கினிய மனைவியாரைப் பெற்றிருந்தும் அவருடன் இல்லறவாழ்வில் ஈடுபட்டிராது, நாட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பலமுறை சிறை வாழ்க்கை மேற்கொண்டார். அவரது வாழ்க்கையில் அவர் ஒன்பது முறை சிறைத் தண்டனை பெற்ருர்; தந்தையாரைத் தீவிர வாதி யாக்கினுர்; சுகபோகத்தில் இருந்த அவரைச் சிறை வாழ்க்கையை மேற்கொள்ளச் செய்தார்; தம் மனைவியாரையும் தங்கையாரையும் நாட்டுப் பணிக்கே அர்ப்பணம் செய்தார்; முதுமை அடைந்த தாயாரை நாட்டுப் பணியில் தடியடிபடச் செய்தார். சுருங்கக் கூறின், ஜவாஹர்மீதிருந்த அன்பே பெற்ரேரையும் மற்ரேரையும் நாட்டுப் பணியில் தீவிரமாக ஈடுபடுத்தியது என்னல் தவருகாது. இவ்வாறு உடல்-பொருள்-ஆவி மூன்றையும் நாட்டு விடுதலைப் போருக்கு அளித்த தியாக வுள்ளமும் செயலும் வாய்ந்த குடும்பத்தைக் காண்பது அரிது! அரிது!! அக்குடும்ப விளக்குகள் ஆகிய ஜவாஹர் இன்று உரிமை பெற்ற இந்திய அரசாங்க முதல் அமைச்சராக இருந்து தொண்டாற்றுகின்ருர்; அவர் தங்கையார் ருஷ்ய நாட்டில் இந்திய அரசாங்கத்தின் தூதராக இருந்து வருகிருர்.

ஜவாஹர் நாட்டின் செல்வம்; காந்தியடிகளின் சிறந்த மாணவர்; 'வெட்டு ஒன்று-துண்டம்

இரண்டு' எனப் பேசுபவர்; அரசியல் இயந்திரம் தூய உள்ளம் படைத்த பெரியோர்களால் நடத்தப்பட வேண்டும் என்னும் கருத்துடையவர். 'உரிமை பெற்ற இந்த நாட்டில் மக்கள் அனைவரும் வறுமை இன்றி-ஒரு தாய்பெற்ற மக்களைப் போல இன்பமாக வாழவேண்டும்', என்பதையே மந்திரமாகக் கூறி வருகின்றவர். இத்தகைய மஹான்-தந்நலம் துறந்த தியாகி நாட்டு மக்களை நன்னிலைக்குக் கொணர, நீடு வாழவேண்டும் அல்லவா? அவருக்கு எல்லா நலங்களையும் அருளுமாறு இறைவனை வேண்டுவோமாக! அவரது அரசாங்கம் நன்முறையில் நடைபெற நாம் ஒத்துழைப்போமாக! வாழ்க ஜவாஹர்!

## 10. கடிதங்கள்

### முன்னுரை

ஜவாஹர் சிறந்த வழக்கறிஞர்; பல கலைப் புலவர்; பொருளாதாரம், இரசாயனம், வரலாறு இவற்றில் வல்லவர். அவர் தமது வரலாற்றைத் தாமே வரைந்துள்ளார். அவர் தம் செல்வ மகளார் ஆகிய இந்திராவிக்கு எழுதிய கடிதங்கள் உலகச் சிறுவர் அனைவரும் படித்துப் பயன்பெறத்தக்கவை. அவர் இந்நில வுலகத்தின் இளம் பருவ வரலாற்றை அழகாகவும் தெளிவாகவும் முப்பத்தொரு கடிதங்களில் தொடர்ச்சியாக எடுத்துக் கூறியுள்ளார். அவ்வரலாறு இந்தி, வங்காளி,

தமிழ்* மொழிகளில் பெயர்த்தெழுதப்பட்டுள்ளது. அக்கடிதங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகள் சில ஈண்டுத் தரப்படுகின்றன; படித்துப் பயன் பெறுக.

## கடிதச் செய்திகள் சில

### இயற்கைப் புத்தகம்

உலகம் ஓர் இயற்கைப் புத்தகம் ஆகும். அதனில் உள்ள ஒவ்வொரு பொருளும் அப்புத்தகத்தின் ஓர் ஏடு என்னலாம். நீ ‡ ஒவ்வொரு பொருளையும் ஆராயின் உன் அறிவு வளர்ச்சி பெறும். வழுவழுப்பான கூழாங்கல்லைப் பார். அஃது எவ்வாறு வழுவழுப்புடையதாக மாறியது? அது தனக்கு வாயிருக்குமாயின், 'நான் முதலில் கரடுமுரடாகத்தான் இருந்தேன்; முதலில் மலையின் சரிவில் இருந்தேன்; பெரு மழை வந்து என்னை அடித்துக்கொண்டு பள்ளத்தாக்கில் சேர்த்தது; அங்கு ஒரு மலை யருவி வந்து என்னைத் தள்ளிக் கொண்டுபோய்ச் சிறிய ஆற்றில் சேர்த்தது; அச்சிறிய ஆறு என்னை ஒரு பெரிய ஆற்றில் சேர்த்தது. நான் ஆற்றின் அடியில் உருண்டு உருண்டு போன பொழுது என் ஓரங்கள் மழுங்கின; உடம்பு முழுவதும் வழுவழுப்பாக மாறியது' என்று தன்

* இக்கடிதங்கள் முதன்முதலில் 'தமிழ்நாடு' என்ற நாள் தாளில் வெளிவந்தன. பின்னர் இவற்றைச் சென்னை மயிலாப்பூர்க் கலைமகள் பதிப்பகத்தார் நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர்.

‡ நீ - இந்திரா நெஹ்ரு.

வரலாற்றை உனக்குப் புன்முறுவலோடு எடுத்துரைக்கும். ஒரு கூழாங்கல்லே இவ்வாறு வியப்புறு வரலாற்றைக் கூறுமாயின், குன்றுகளும் மலைகளும் கூறும் வரலாறுகள் எவ்வளவு சுவை பயப்பனவாக இருக்கும்! (கடிதம், 2)

## மனித இனங்கள்

புதிய கற்கால மனிதனுக்கும் இக்கால மனிதனுக்கும் இடையில் எவ்விதமாறுபாடோ, பிளவோ, உண்டாகவில்லை. இருப்பினும் இக்கால மனிதனுக்கும் அவனுக்கும் வேறுபாடுகள் நிரம்ப உண்டு. அந்த வேறுபாடுகள் இயற்கையின் போக்கை ஒட்டிப் பையப் பைய உண்டானவை. மனித இனங்கள் பல ஆயின. ஒவ்வோர் இனத்தவரும் தத்தம் விருப்பம்போல நடந்து தமக்கு ஏற்றவாறு வாழ்ந்து வந்தனர். தட்ப - வெப்ப நிலைமை உலகத்தின் பல பகுதிகளில் வெவ்வேறு வகையாக இருப்பதால் மக்கள் அந்தந்த இடத்திற்கு ஏற்றவாறு தம் வாழ்வை அமைத்துக்கொண்டனர். அதனால் ஒரு பகுதியில் வாழ்ந்த மக்கட்கும் பிற பகுதிகளில் வாழ்ந்த மக்கட்கும் வேறுபாடுகள் உண்டாயின. (கடிதம், 7)

## நிறமாற்றம்

தட்ப - வெப்பநிலையே நிறத்திற்குக் காரணம். இந்தியாவில் காஷ்மீரத்திலும் பஞ்சாபிலும் உள்ள மக்கள் சாதாரணமாகச் செந்நிறமுள்ளவராகக் காண்கின்றனர். தெற்கே போகப் போகச் சூடு மிகுதி ஆதலால் அங்குள்ள மக்கள் கறுப்பு நிறத்தினராக இருக்கின்றனர். சூட்டுப் பகுதியில் வாழ்ந்

தாலும் வெளியில் வேலை செய்யாத மக்கள் பொது மக்களினும் வேறுபட்டுக் காண்கின்றனர்.

(கடிதம், 8)

## நாகரிகத்தின் அடையாளம்

அழகிய கட்டடங்கள், நூல்கள், ஓவியங்கள், சிற்பங்கள், வனப்பு வாய்ந்த பிற பொருள்கள் - இவை அனைத்தும் நாகரிகத்தின் அறிகுறிகளாகும். ஆயின், நற்குண - நற்செய்கை வாய்ந்து தன்னல மற்றவனாய்ப் பிறர் நலத்துக்கு உழைப்பவனாயுள்ள மனிதன் முன் சொன்னவற்றைவிட உண்மை நாகரிகத்தின் அடையாளம் ஆவான். அவனைப் போன்ற மக்களைப் பெற்ற நாடே நாகரிக நாடாகும்.

(கடிதம், 11)

## கட்டுரைப் பயிற்சி

கீழ்க் காணும் ஒவ்வொரு பொருள் பற்றியும் ஒன்றரைப் பக்கங்கட்கு மிகாமல் கட்டுரை வரைக :—

1. ஜவாஹரின் முன்னோர் சிறப்பு
2. மோதிலால் வழக்கறிஞர்
3. மோதிலாலும் உரிமைப் போரும்
4. மோதிலால் குணநலங்கள்
5. ஜவாஹர் இளமைப் பருவம்
6. ஜவாஹர் வீட்டில் கல்வி கற்றமை
7. ஜவாஹர் இங்கிலாந்தில் கல்வி கற்றமை
8. ஜவாஹரும் காங்கிரஸ் இயக்கமும்
9. இந்திய முன்னேற்றம் பற்றி ஜவாஹர் கருத்துகள்
10. நெஹ்ரு - குடும்பத்தினரும் உரிமைப் போரும்
11. கமலா நெஹ்ரு
12. ஜவாஹருடைய குணநலங்கள்